தென்மொழி

விலை
உருபா 1-25

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 22
ஓலை : 11

நமக்கு வந்த மடல்கள்.

(ஒரு திருத்தம் : கடந்த இரண்டு இதழ்களிலும், மடல்களின் எண் வரிசையில் ஒரு பிழை நேர்ந்துள்ளது. எனவே அன்பர்கள் சு. 22; ஓ. 9-இல் உள்ள மடல் எண் *1156*-ஐ, *1167* என்றும்; சு. 22; ஓ 10-இல் உள்ள மடல் எண்கள் *1157*, *1158*, *1159*, *1160*, *1161* ஆகியவற்றை முறையே, *1168*, *1169*, *1170*, *1171*, *1172* என்றும் திருத்திக் கொள்க.)

0:1173: தமிழின விடிவு நோக்கிப் போர் முரசு கொட்டும் தலைமை வேழம் பாவலரேறு ஐயா அவர்களுக்கு அமுதத் தமிழ் வணக்கம்.

தனிச் செம்மொழியாம், தமிழ் மொழிக்கு உரியவர்களாகிய நாம் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்தோம், அன்று; ஆனால் இன்றோ நமக்கென்று ஒரு நாடின்றியும் இருந்த தாயகத்தையும் வடவ, பார்ப்பானிய நரிகளிடத்தில் விட்டுக் கொடுத்தும் மீளா அடிமைத்தனத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இதற்குக் கரணியம் யாதெனில் நம்மிடையே உள்ள பிளவுகள், ஒற்றுமையின்மையே. இக்கால் நாம் செய்யவேண்டியது யாதெனில் தாயக விடுதலைப் படை ஒன்றை அமைக்கவேண்டும். இன, மொழி, நாட்டு விடுதலைக்காகத் துமுக்கி ஏந்திப் போரிட வேண்டும்.

நம் தனித்தமிழ் நாட்டை முட்டி மோதியேனும் பெற்றே தீர வேண்டும். இதற்கு உலகமுழுவதிலுமுள்ள தமிழரிடத்திலிருந்து பொருள் தண்டுவோர், எத்தனையெத்தனை, எதிர்ப்பு, இடையூறுத் தொல்லைகள் வந்தாலும், தங்களுடைய காலத்திலேயே மொழி, நாட்டு விடுதலைக்காகப் படையெடுத்துக் கருவி ஏந்திப் போராடவில்லையானால், இனி எக்காலும் தமிழினம் உயராது, தமிழ்மொழி தூய்மையாகாது, தனித்தமிழ் நாடு விடுதலை பெறாது, என்பது மட்டும் உறுதி. போற்றுகின்ற பண்பாளர் போற்றட்டும். மேலும் தூற்றுகின்ற தீமனத்தார் தூற்றட்டும்; நாளும் ஏற்றிடுவோம் மொழியுணர்வை, இனவுணர்வை! தங்களது செம்மாந்த பயணம் வெற்றியை ஈட்ட வேண்டி!நிற்கிறோம்.

தென்மொழி, தமிழ் நிலம், தமிழ்ச் சிட்டின் வாயிலாகவும் ஏனைய தங்களுடைய பொத்தகங்களிலுமுள்ள, தங்களுடைய கருத்துகளை மலையகவாழ் தமிழ் இளைஞர்களுக்குத் தெரிவித்து அவர்களுடைய ஆதரவைத் திரட்ட ஒரு கையொப்ப இதழை (தனித் தமிழ் இதழ்களில் உள்ள கருத்துகளை) என்னுடைய சொந்தச்செலவில் அடித்து இலவயமாக அளிக்க விருப்பம் கொண்டுள்ளேன். அதற்குத் தங்களுடைய ஒப்புதல் தேவை. (ஒப்புதல் கிடைக்கும் என்று உறுதியாக நம்புகின்றேன்).

அத்துடன் உ. த. மு. க. வில் உறுப்பினராகும் வழிகளையும் தெரிவிக்கவும். விடை முடங்கலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

- செ. மீ. இர. தமிழன்பனார், சுங்கை, மலேசியா,

(தொடர்ச்சி அட்டை 3 ஆம் பக்கம் பார்க்க)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு.ஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தேனியல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ. (தொலைபேசி: 847829)
(பெயரில்லாப் படைப்புகள் பொறுப்பாசிரியர் எழுதுவன.)

சுவடி 22] ௨௦௧௭ துலை (அக்-நவ-1986) [ஓலை 11

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு!



தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு' ஒன்று உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பில், வரும் திசம்பர் 27, 28-இல், சென்னையில் நடைபெறவிருக்கிறது. அது பற்றிய அறிக்கைகள் தமிழ்நிலத்திலும், சென்ற தென்மொழியிலும் வெளியிடப் பெற்றுள்ளன. அன்பர்கள்

எல்லாரும் அது பற்றித் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறோம். அக்கருத்தரங்கில் பங்கெடுத்துக் கொள்வது என்பதுபற்றியாகட்டும், அதற்கு நம் பங்கைச் செலுத்த வேண்டும் என்பதுபற்றியாகட்டும், உங்கள் சிந்தனை, கட்டாயம் தவறாமல் செயலாக வேண்டும் என்பதே நம் வேணவா; வேண்டுகோள்!

இக் கருத்தரங்குக்கு நம் பங்கை ஆற்றுவது தொடர்பாகவும், அதில் நாம் கட்டாயம் பங்கெடுத்துக் கொள்வது தொடர்பாகவும் இன்னும் சில விளக்கங்களைப் பெறுவது, இந்தக் கட்டத்தில் மிகவும் முகாமையானது என்பதுடன், முதலில் இப்படி ஒரு கருத்தரங்கு எவ்வகையில் நமக்கு மிகவும் தேவையானது என்பது பற்றியும் முதலில் நாம் தீர்மானமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்தக் கருத்துகளின் முகாமையான நோக்கத்தை முதலில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். கருத்தரங்கின் தலைப்பே, அந்நோக்கத்தைத் தெளிவாக நமக்கு உணர்த்தி நிற்கிறது. 'தமிழின எதிர்காலத் தீர்மானிப்பு' என்பதே அக்கருத்தரங்கின் தலையாய நோக்கமாகும்.

பொதுவாகவே, தமிழினத்தின் எதிர்காலத்தை இன்னும் தீர்மானித்துக் கொள்ளாமலா இருக்கிறோம்? என்று சிந்திப்பதே நமக்கு இழிவும் இழப்பும் ஆகும் என்று நம்மில் சிலர் அல்லது பலர் கருதலாம். இல்லை; நம்மைப்பொறுத்தவரை அதை நாம் எப்பொழுதே தீர்மானித்துக் கொண்டோம் என்பதே மிகவும் உண்மையானதும், மிகவும் உறுதியானதும் ஆகும். ஆனால்,ஏற்கனவே பல வகைகளிலும் அடிமையும் அறியாமையும் மிடிமையும் உற்றுக் கிடக்கும் தமிழினம், இன்றைய நிலையில்,அஃதாவது, நாளானது சென்று கொண்டே இருக்க, அவ்வடிமைத் தனத்தை மேலும் இறுக்கிக் கொண்டும், தனக்கு தானே கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டும், நிலைமையில் இன்னும் கடுமையாக்கிக் கொண்டுமே வருகிறது என்பதை உணர்கையில், நாம் இப்பொழுதைக்கு ஆற்றி வரும் அடிமை நீக்க முயற்சிகளை இன்னும முடுக்கமாகவும், வேகமாகவும், வலித்தமாகவும் ஆற்றவேண்டும் என்பதையே தீர்மானிக்க வேண்டி உள்ளது. எனவே இக் கருத்தை நம் மக்களுக்கிடையில் இன்னும் விளக்கப் படுத்தவும், உறுதிப் படுத்தவும், பரவலாக்கவும், அதே பொழுதில், நம் இன எதிரிகளுக்கும், நம்மை அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்து கொண்டிருக்கும், வடநாட்டுப் பார்ப்பன -வணிக இந்தி வெறியின் வல்லாண்மை போக்கினர்க்கும் ஓர் எச்சரிக்கையும், போராட்ட அறிவிப்பும் கொடுக்க வேண்டும் என்பதுவே இக் கருத்தரங்கின் முகாமையான உடனடித் தேவையான நோக்கமாகும். ஆகவேதான் கருத்தரங்கு, அதற்கான எந்த வகையான முறையான முன்னேற்பாடுகளும் இன்றிப், போதுமான பொருள் திரட்டல்முயற்சிகளும்

இன்றிக் குறுகிய கால இடை வெளிக்குள்ளாகவே கூட்டப் பெறுகிறது.

இப் பொழுதுள்ள தமிழினத்தின் அரசியல், பொருளியல், குமுகவியல் நிலைகள் மிக மிகக் கீழ்மைப் பட்டனவாகும். நாளுக்கு நாள் திடீர் மாற்றங்களும் பதவிப்பறிப்புகளும், அதிகார மேம் படுத்தங்களும் அரசியலில் மிகுதியாகிக் கொண்டே வருகின்றன. எப்பொழுது என்ன நடக்கும் என்பது எவராலும் தீர்மானிக்க முடியாதாகி வருகிறது. பொருளியலைப் பொறுத்த அளவில், தமிழினமும், தமிழ்நாடும் மேன்மேலும் சூழ்ச்சிக்கும் சுரண் டலுக்கும் உள்ளாகி வருவதைப் பார்த்து, நெஞ்சம் கொதிக்க வேண்டி உள்ளது. குமுகவியலோ, சொல்லும் தரத்தது அன்று; மதம் தன் கால்களை அகல விரிக்கிறது. சாதிப் பூசல்கள் இன்னும் ஆழமாக வேரூன்றுகின்றன. அறிவியலும், புதிய பொருளியலும், அதிகார வீக்கமும் இந்து மதப் பரப்புதல் களுக்கு ஏவல் எடுபிடிகளாகவும், காவல் நாய்களாகவும், மதவெறி மொழிவெறி ஆட்சியாளர்களுக்கு மண்டியிட்டு உழைக்கின்றன.

இந்த நிலையில், தமிழின மக்களைத் தமிழக அரசு, புதியகல்வித் திட்டம் என்னும் பெயரால் மூளைச் சலவை செய்து கொண்டும், தொழில் பெருக்கம் என்னும் பெயரால், நிலையான சூத்திரக் கொத்தடிமைகளாக ஆக்கிக் கொண்டும், பசுமைப் புரட்சி என்னும் பெயரால் உழவர் மக்களை ஆடுமாடுகளாக்கிக் கொண்டும், குடும்பத் திட்டம் என்னும் பெயரால், ஆண்களைக் காயடித்துக் கொண்டும், பெண்களைக் கருவழித்துக் கொண்டும்- வருகிறது.

ஆக, இப்படியே இன்னும் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தால்- அஃதாவது இராசீவ் கருத்துப்படி, அவர் அழைத்துச் செல்லவிருக்கும் இருபத்தோராவது நூற்றுண்டுத் தொடக்கத்திற் குள், தமிழினம் முற்றும் மொட்டையடிக்கப்பட்டு மொழுக்காண்டி யாகவும், மீசை மழுக்கப்பட்டுப் பெட்டை மூஞ்சியாகவும், மூக்கறுக் கப்பட்டு, மூளியாகவும், கைகால்கள் முறியடிக்கப்பட்டுக் கழி மூட மாகவும், மூளைச் சலவை செய்யப்பட்டு. இயந்திர 'ரொபோ' (Robot)க்களாகவும் ஆக்கப்படுவது உண்மை, உண்மை முக்காலும் உண்மை!

இந்த அவல முடிவைத் தமிழினத்திற்கு அறிவிக்க வேண்டாமா? இப்படியொரு 'டினேசார்' அழிவுக்காலம் போல், தமிழின அழிவுக்காலம் வருவதைத் தடுத்து நிறுத்த வேண்டாமா? அத்துடன், தமிழினத்தின் பிரகலாதன்கள், எட்டப்பன்கள் கூட்டங் களை வைத்துக் கொண்டு, தமிழின அழிவைக் கொஞ்சம் கொஞ்ச மாகச் சீரழித்துக் கொண்டிருக்கும், வடநாட்டுப் பார்ப்பன-முதலாளி யக் கொள்ளையர்களுக்கும், இந்தி வல்லாண்மை வெறியர்களுக்கும், ஓர் எச்சரிக்கை தர வேண்டாமா?— அவற்றுக்காகத்தான் - மேலும்

மேலும் இந்த வகையில் நம்மைச் செயலில் ஈடுபடுத்திக் கொள்வதற்காகத்தான்- இந்தத் திசம்பர் கருத்தரங்கு!

தீர்மானிப்புக் கருத்தரங்கு என்றால், நம் நிலைகளை இனிமேல் தான் பேசித்தீர்க்கவோ, அவற்றுக்கான ஒரு திட்டவட்டமான முடிவை எடுக்கவோ வேண்டும் என்பதில்லை. ஏற்கனவே எடுத்த முடிவுதான்: இத்தனை நாள்கள் சொல்லிக் கொண்டு வந்த முடிவுதான்' ஆனால், இப்பொழுது, நாம் சொல்லிக் கொண்டு வந்த அந்த முடிவுக்குப் பொதுமக்கள் ஆதரவு எவ்வளவில் உள்ளது என்பதை வெளிப்படுத்தவும், அதனை அரசுக்கு எச்சரிக்கையாக எடுத்துக் கூறவுந்தான் இந்தக் கருத்தரங்கு!

எனவே, இந்தக் கருத்தரங்கு தமிழின வரலாற்றில் மிகவும் முகாமையானது; மிக மிக இன்றியமையாதது. ஆனால், நம்மிடம் உள்ள பொருளேந்துக் குறைவாலும், போதிய காலமின்மையாலும், மெய்த் தொண்டர்கள் குறைவாலும், இக்கருத்தரங்கை இன்னும் சிறந்த முறையில் விளம்பரம் செய்து, பேரளவில் மக்களைத் திரட்டுதற்கு வாய்ப்பில்லாமற் போனது. இருப்பினும் மனத்தளர்ச்சியின்றி இயன்ற அளவில் தொடங்கிக் கருத்தரங்கை முழுவெற்றியுடன் நடத்தி, அரசுக்கும் நம் இன எதிரிகளுக்கும் ஒரு பெரும் எச்சரிக்கை தர விருக்கின்றோம்.

ஆகவே, அன்பர்கள் இம் முயற்சிக்குப் பெரிதும் ஒத்துழைப்புத் தரவேண்டுகிறோம். ஆங்காங்குள்ள தென்மொழி, தமிழ்நிலம், அன்பர்களும், உ. த. மு. க. தொண்டர்களும் தம் தம் குடும்பங்களுடனும், நண்பர்கள் குழாமொடும் பெருத்த அளவில் கலந்து கொண்டு, இவ்வரலாற்றுச் சிறப்புடைய கருத்தரங்கிற்குத் தம்தம் பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றும், தம்மால் இயன்றளவு பொருளுதவிகளைச் செய்ய வேண்டுமென்றும், அன்புடனும் நம்பிக்கையுடனும் வேண்டிக் கொள்கிறோம். பிறபின்

பேரா. கு. வெ. கி. ஆசான் அவர்களின் அன்னையார் மறைவு

கோவை தேசியத் தனிப்பயிற்சிக் கல்லூரி முதல்வரும், பன்னூலாசிரியரும் ஆகிய பேரா. கு.வெ.கி. ஆசான் அவர்களின் அன்னையார், 95 அகவை மூதாட்டியார், கடந்த 27-10-86 அன்று மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்துகிறோம். அவர்க்கும் அவர் குடும்பத்தினர்க்கும் நம் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-ஆசிரியர்.

கேள்வி: 15: தாங்கள் மலேசியா சென்று வந்ததற்குப் பின்னர் நான் அங்குச் சென்று வந்தேன். இடையில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளரும் அங்குச் சென்று திரும்பியுள்ளார். அவர் அங்குத் தங்களைப் பற்றித் தாறுமாறாகச் சில கருத்துகளைக் கூறி வந்ததாக அங்குக் கேள்விப் பட்டேன். அஃதாவது, தாங்கள் தெலுங்குத் தாய்மொழியினர் என்றும், அப்படிப் பட்டவர் எவ்வாறு தமிழினத்திற்கு உண்மையாய்ப் பாடுபடமுடியும்என்றும் தங்களின் இரண்டாம் மருமகனார் சொல்லாய்வறிஞர் அருளி மலையாளி என்றும், அவர் எப்படித் தூய தமிழ் அகரமுதலியை எழுதி முடிக்க முடியும் என்றும், தமிழீழப் போராளித் தலைவர்களுள்ஒருவரான உமாமகேசுவரன் என்னும் முகுந்தனுக்குத் தங்களின் பெண்களுள் ஒருவரைத் திருமணம் செய்து கொடுத்துள்ளதாகவும், அதனால்தான் அவர் தங்களுக்குப் பண உதவிகள் செய்து வருவதாகவும் அவ்வுதவிகளைக் கொண்டே, தாங்கள் மூன்று இதழ்களையும் நடத்தி வருவதாகவும், இவ்வாறு பலவாறும் கூறிவந்தாராம். அவை உண்மையா?

(நம்பிக்கையான ஓர் அன்பர் 13-10-86-இல் நேரில் வந்து கேட்ட கேள்வி)

விடை: அவர் கூறியனவாகக்கூறும் மூன்று செய்திகளிலுமே ஒரு சிறு அளவு கூட உண்மையில்லை. உண்மைகள் அல்லாதவற்றை அவர் எவ்வாறு ஒரு நாலாந்தர, ஐந்தாந்தர அரசியல் மேடைப் பேச்சாளியைப் போல் கூறினாரோ, தெரியவில்லை. ஒருவேளை நம் கருத்துகள் பரவி வருவது அவருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால், அதற்காகப் பொய்கூறி அவற்றை முறியடிக்க முயல்வது அவரது மெலிவையே காட்டுகிறது.

கேள்வி: 16 (மலேசியா, டேவான் செர்பகூஞ நிகழ்ச்சியில் கேட்கப் பெற்ற விஞ.)

வீரத்திலும் அறிவிலும் சிறந்த தமிழர் ஏன் அடிமைப்பட்டுப் போனூர்கள்?

(அட்டை 4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

பிடித்துப் பிறமொழி இனம், நாடு, பண்பாடு, கலே, வரலாறு முதலியவற்றை இந்துவயமாய் ஆக்குவதற்கு, எவ்வெவற்றைச் செய்ய வேண்டுமோ, அவ்வவற்றையெல்லாம் செய்துவருகிறுர்கள் வடவர்களில் பெரும்பாலோரும். பிற தேசிய இனங்களை ,இந்து வயமாக ஆக்குவதில், எக்கட்சியைச் சார்ந்தவராயினும், ஒரே கருத்துடையவராய் இருக்கின்றனர்.

கலே நடுவங்களைத் தொடங்கியது, புதிய கல்விக் கொள்கையைத் திணித்து, மாநில அதிகாரங்களைப் பறிப்பது, புதிய கல்விக் கொள்கையை எதிர்ப்புக்கிடையிலும் நடைமுறைப் படுத்துவது போன்ற செயல்களும் வடவரின் தமிழின அழிப்பு எண்ணத்தையும், துணிவையும் காட்டுவன ஆகும்.

இந்நிலேயிலும் தமிழினத்தலேவர்கள் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டும், எங்கே மற்றவர்களுக்கு, நம்மைவிட மக்களின் சாய்கால் கிடைத்து விடுமோ எனப் பொருமை உணர்வு கொண்டும், பதவியையும் தலேமையையும் காப்பாற்றிக் கொள்ள, எவற்றைச் செய்ய வேண்டுமோ, அவற்றைச் செய்து கொண்டும், ஒற்றுமையின்றி இருக்கிருர்கள். இந்நிலே வடவருக்கு ஏதுவாக அமைந்து விட்டது. எனவே துணிந்து இன அழிப்புச் செயலில் இறங்கி விட்டனர்.

இன அழிவைத்தாக்க விடுதலேதான் சரியான வழியாகும். ஆனல் இங்கு எந்தத்தலேவரும் அதைப்பற்றி வாய்திறக்க வில்லே. தாங்கள் ஒருவர்தாம் துணிந்து, தமிழக விடுதலேயின் இன்றியமையாமை பற்றிக் குரல் கொடுத்து வருகிறீர்கள். எனவே நீங்கள்தாம் தமிழினத்தின் உண்மையான தலேவர். உம்மால்தாம் இவ்வழிவு நிலேயைத்தடுக்க முடியும்.

ஆகவே, தமிழினம் இழந்து விட்ட உரிமைகள், பெருமைகள் இவற்றை மீட்க - நம் மொழி, கலே, பண்பாட்டை அழியாமல் காக்க - தாழ்வுகள், இழிவுகள், அழிவுகள் இவற்றைப் போக்க- ஆரியஞக மாறிவரும் தமிழனேத் தமிழஞக ஆக்க,- தமிழினந் தான் உலகின் மூத்த இனம் என்பதை, மறைக்க வொண்ணாமல் நிலே நாட்ட, தமிழக விடுதலே மிகமிகத் தேவை. அதுவும் விரைவில் தேவை. அதுவின்றி எதுவும் செய்ய இயலாது. தமிழினத்தைப் பிடித்த மொத்த நோய்கள் அனேத்திற்கும் விடுதலேதான் சரியான மருந்து. எனவே, தொடங்குங்கள் விடுதலேப் போரை! அடக்குங்கள் வடவர் ஆணவத்தை! பாவலர்-சின்னப்பஞர்

கொம்மக் கோவில்,

இவ் விரண்டு உணர்வுகளிலும் முரண்பாடுகள் மிகுதி; உடன்பாடுகள் குறைவு. இந்நிலையை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்ட எதிரிகளின் சூழ்ச்சிகளால், இவ்வினம் தனக்குள்ளேயே பூசல்களையும் உட்பகைகளையும் பெருக்கிக் கொண்டு பல்குழுக்களாகப் பிரிந்து, சிதர்வுற்று, எதிரிகளுக்கு இரையாகிப் போனது. வரலாற்று அடிப்படையிலும் இலக்கியங்களிலும் இதற்கு நிறைய சான்றுகளுண்டு- 'ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே; இருவீர் வேறலும் இயற்கையு மன்றே' என்னும் புறநானூற்றுச் செய்யுளடியையும் அதன் பின்னுள்ள வரலாற்றையும் எண்ணிப் பாருங்கள்.

கேள்வி 16: (மேற்படி நிகழ்ச்சியில்)

ஆப்பிள் பழத்திற்குத் தமிழில் என்ன பெயர்?

விடை. ஆப்பிள் (Apple) என்னும் சொல் ஏப் (Ape) என்னும் செம்முகக் குரங்குப் பெயரிலிருந்து வந்த சொல். அக் குரங்கின் முகவாய் போல் சிவந்தும் உருண்டும் இருப்பதால் அப் பழத்திற்கு 'ஏப்பிள்' என்று வந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். மொழியறிஞர் தேவநேயப் பாவாணர் அதை "அரத்திப்பழம் என்று அழைத்தார். அரத்தம் (சிவப்பு)- அரத்தி-அரத்தம் போல் சிவந்த தோற்றம் உடையது என்பது அதன் பொருள்.

கேள்வி 17: (மேற்படி நிகழ்ச்சியில்)

ஆசிரியரைத் தமிழில் ஐயா என்று அழைக்கிறோம். ஆசிரியையை எப்படி அழைப்பது?

விடை: **'அம்மா'** என்று அழைக்கலாமே! இப்பொழுது அவர்களை 'Madam' என்று ஆங்கிலத்தில் அழைப்பதற்கும் அதுதானே பொருள்.

கேள்வி: 18 (மேற்படி நிகழ்ச்சியில்)

ஆதி என்னும் சொல் தங்கள் கூற்றுப்படி தமிழ்ச் சொல் என்றால், அகராதி என்பதை ஏன் அகரமுதலி என மாற்றினீர்கள்?

விடை: 'ஆதி' என்னும் சொல் மூலம் தமிழ். ஆனால்பிராகிருதச் சொல் என்று தொடக்கத்தில் கருத வேண்டியிருந்தது. இக்கால் அதுவும் தூய தமிழ்ச் சொல்லே என்று சொல்லாய்வறிஞர் **அருளி** அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார். இனி, அகராதி **அகரமுதலி** இரண்டு சொற்களையுமே வழங்கலாம்.

கேள்வி: 19 (மேற்படி நிகழ்ச்சியில்)

தங்கள் கூற்றுப்படி ஜ, ஸ,ஷ, ,ஹ, க்ஷ போன்ற எழுத்துகள்

தமிழ் என்ருல், ஜூலையை சூலை என்றும், ஜப்பானை சப்பான் என்றும் எழுதுகிறீர்களே; விளக்குவீர்களா?

விடை: வடமொழி எழுத்துகள் என்று நாம் பொதுவாகக்கூறும் அவ்வெழுத்துகள் சமசுக்கிருத எழுத்துகள் இல்லை; தமிழும் இல்லை; **பிராகிருத எழுத்துகள்.** பிராகிருதம் என்பது தமிழர்கள் வடக்கே போன பொழுது, காலத்திற்கும் இடத்திற்கும் வெப்ப தட்பத்திற்கும் ஏற்ப ஒலிகள் திரிந்து வழங்கிய தமிழ்மொழியே! அது வடதிராவிடம். எனவே வடதிராவிடத் தமிழினத்தவர்கள் அங்கிருந்த கால, இட, பருவ நிலைகளுக்கு ஏற்பப் புதிதாக உருவாக்கிக் கொண்ட அவ்வெழுத்துகளை. நாம் இன்றைய அளவில், இன்றியமையாத நிலையில், சில வேற்றுமொழிச் சொற்களைப் பலுக்குவதற்குப் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை என்பதே நம் கருத்தாகும். ஆனல் இதுபற்றித் தெளிவான கருத்து ஒன்று உருவாகும் வரை அவற்றை நாம் பின்பற்ருமல் இருப்பதே நல்லது.

தனித்தமிழன்பர்- பகுத்தறிவாளர் முற்போக்காளர்க்கு
ஒரு புதிய வரவு !

ஆரியவேடர் ஆதிசங்கரரைத்தோலுரித்துக்காட்டும்முதல்நூல்

"ஆதிசங்கரரின் மக்கள் விரோதத் தத்துவம்"

நூலாசிரியர் ; **கே. எசு பகவான்**
(மைசூர்ப்பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர்;
வடமொழிப் புலவர்; கன்னட எழுத்தாளர்)
ஆங்கிலப் பெயர்ப்பிலிருந்து தமிழாக்கியவர்: **வீ. செ. வேலிறையன்**

"உலகமே மாயை" என்று மாயைக் கொள்கை (மாயாவாதம்) பேசியவர் ஆதிசங்கரர். "உயிர்களும் பரம்பொருளும் (ஜீவாத்மாவும் பரமாத்மாவும்) ஒன்றே" என்னும் ஒருமை (அத்வைத)க் கொள்கையை எடுத்துரைத்தவர் இவர்.

இப்படிப்பட்ட ஆதிசங்கரர் நடைமுறையில் எப்படி இருந்தார்? இவர் யாருக்கு நண்பர்? யாருக்கு எதிரி? உண்மையில், யாவும் மாயை என்று நம்பினரா? ஒருமை உணர்வுடன் வாழ்ந்து காட்டினரா? பிராமணியத்தைக் காப்பதற்காக இவர் புரிந்த அழிம்புகள் என்னென்ன? மக்களுக்கு நன்மை தருவனவா இவர் கருத்துகள்?

கன்னடத்தில் வெளியான உண்மை விளக்க நூலைத் தமிழ் மக்களுக்கு வழங்குகிறோம்.

விலை: உரு 5-00 ; கிடைக்குமிடம்: **"மகரந்தம்"**
19 மேற்கு மடவளாகம், கரூர் - 639 001.

தனித்தமிழ் அன்பர்கள் தெளிவான முகவரியுடன் உரு 4-50 பணவிடை அனுப்பினல் எமது செலவில் நூல் அனுப்பி வைக்கப்படும்.

வேறென்ன சொல்வது?

1) பல்கலைக் கழகப் படிப்பில், அனைத்து மட்டத்திலும் தமிழைப் பயிற்று மொழியாகத் தீவிரமாக நடைமுறைப் படுத்தவேண்டும் என்பதுதான் தமிழக அரசின் கொள்கை.

கல்வி அமைச்சர் **அரங்கநாயகம்**
திருச்சி. அக் 10

பணிவாய்ப்பு இல்லாமல் தானே தமிழ்ப் பயிற்றுமொழித் திட்டம் வெற்றிபெறவில்லை என்பது அமைச்சருக்கு இன்னும் விளங்கவில்லையே-அஃது ஏன்?

2) தம்மைக் கொல்ல நடந்த முயற்சியில் ஒரு வெளிநாடு தொடர்பு கொண்டுள்ளது.

—இராசீவ் காந்தி
இந்தோனேசிய நாளிதழ் 'கொம்பாசு'க்கு அளித்த நேருரை
-அக்-10.

ஏன்? உள்நாட்டில் அத்தகைய உணர்வுள்ளவர்கள் இருக்க மாட்டார்களோ?

3) வன்முறை எதிர்ப்பு என்னும் பெயரால், இலங்கைப் போராளிகளை எதிர்க்க இலங்கைக்கு அமெரிக்கா உதவும்.

—செய்தி அக்-10.

நடுநிலையாக எண்ணினால் மிகக் கொடுமையான வன்முறையைக் கையாளும் கொழும்பு அரசை எதிர்க்கப் போராளிகளுக்கு அன்றோ உதவ வேண்டும்.

4) இராசீவ் காந்தியைக் கொல்ல முயன்ற ஒருவர் நாட்டுத் துமுக்கியுடன் பிடிபட்டார். மூன்று முறை சுடப்பட்டும் இராசீவுக்குக் குண்டுக் காயம் எதுவும் படவில்லை

—செய்தி அக்-2

உண்மையாகச் சுடவருபவர் மூன்றுமுறை பயன் படுத்தியும் பயன்படாத நாட்டுத் துமுக்கி எடுத்துக்கொண்டா வருவார்!
ஒருவேளை இதுவும் ஒரு நாடகமோ?

5) இந்திமொழிச் சிக்கலில் நேரு உறுதிமொழி அரசியல் அமைப்பியல் சட்டத்தில் இடம்பெற வேண்டும் என்னும் கோரிக்கையில் பசையில்லை.

—பக்தவத்சலம்
90-ஆவது பிறந்தநாள்
செய்தி அக்-9.

உண்மையாக, நேரு உறுதிமொழியிலேயே பசையில்லையே!

6) முதலில் நான் காவல் துறையில் துணை ஆய்வாளர்(சப்-இன்சுபெக்டர்) ஆவதற்கே விரும்பினேன். —ஆந்திர முதல்வர் என். டி. இராமராவ் அக்-10

இப்பொழுது என்ன கெட்டு விட்டது?முதலமைச்சர் பதவி பல்லாயிரம் காவல் துணை ஆய்வாளர்களுக்குச் சமம்தானே!

7) நேரு உறுதிமொழியைச் சட்டத்தில் இணைப்பதற்கான கிளர்ச்சி தொடரும் என்று தலைவர் கருணாநிதி அறிவித்தார். செய்தி, அக் 7

நேரு உறுதி மொழியை வைத்துக் கொண்டே இந்த நூற்றாண்டை ஓட்டி விடலாம்

8) தமிழ்நாடுஇந்திராபேராயக் கட்சிக் குழுவில் உட்பூசல் சூடு பிடித்துக் கொண்டிருக்கிறது. கட்சியில் காணும் இந்த நிலைமைகளைக் கண்டு மாநில இந்திரா பேராயக் கட்சி ஊழியர்கள் ஒன்றும் புரியாமல் குழம்பி நிற்கின்றனர். -செய்தி அக்-7

அவர்களுக்கு எப்போது எதுதான் புரிந்திருக்கிறது!

9) தமிழ்நாட்டில் மாணவர்கள் இந்தி படிக்க வசதி செய்ய வேண்டும். -தமிழக அரசுக்கு ம. பொ. சி. கோரிக்கை மதுரை அக்-5.

இப்பொழுது செய்திருப்பதெல்லாம்அதுதானே!

10) இந்தி மொழிச் சிக்கலுக்கு நிலையான தீர்வு காண நேருவின் உருதிமொழியைஇந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில்இணைக்கும் படி அ. தி. மு. க. செயற்குழு நடுவணரசைக்கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. -செய்தி. அக்.

போகாதஊருக்குவேண்டாத ஆளிடம் இல்லாத தடத்தைக் கேட்பது என்பது இதுதான்!

11) பஞ்சாப் சிக்கல் பற்றி வெளிநாட்டில் பொய்யான கருத்துப் பரப்புதல்களுக்கு இராசீவ் கண்டனம். அண்டை நாட்டில் எந்தெந்த இடங்களில் எந்தக் கட்டங்களில் பயிற்சி அளிக்கப் படுகிறது என்பது பற்றி இந்திய அரசிடம் திட்டவட்டமான ஆதரங்கள் உள்ளன. -சிட்டினி செய்தி அக். 15

இராசீவ் அரசு செய்யும் கருத்துப்பரப்புதல்கள் மட்டும் உண்மையோ?

கற்பனை ஊற்று **தொடர் :2-5**

இல்லையும் இருக்கிறதும்.

-மெய்ம்மைப்பித்தன்

இல்லை என்று ஒன்று இல்லை !
இருக்கிறது என்றும் ஒ

இல்லையும் இல்லை;
இருக்கிறதும் இல்லை;
இருக்கிறதும் இருக்கிறது;
இல்லையும் இருக்கிறது;

இல்லாமலும் இருக்கிறது;
இருக்காமலும் இல்லை;

இல்லையும் இல்லாமல் இல்லை.
இருக்கிறதும் இல்லாமல் இல்லை.
இல்லையும் இல்லாமல் இருக்கிறது;
இருக்கிறதும் இல்லாமல் இருக்கிறது!

இல்லை இருக்கிறது இல்லை;
இருக்கிறது இருக்கிறது இல்லை!
இல்லாமல் இருக்கிறதும் இருக்கிறது;
இருக்கிறது இருக்கிறதும் இருக்கிறது;

இல்லை இல்லாமலும் இருக்கிறது
இருக்கிறது இல்லாமலும் இருக்கிறது !
இல்லை இல்லாமலும் இல்லை.
இருக்கிறது இல்லாமலும் இல்லை.

இருக்கிறது இல்லை இருக்கிறது!
இல்லை இல்லை இருக்கிறது;
இருக்கிறது இல்லை இல்லை;
இல்லை இல்லை இல்லை;

இல்லை இல்லாமல் இல்லை இல்லை;
இருக்கிறது இல்லாமல் இல்லை இல்லை!
இல்லையும் இல்லாமல் இருக்கிறது இல்லை;
இருக்கிறதும் இல்லாமல் இருக்கிறது இல்லை

இல்லை இருக்கிறது இல்லை இல்லை;
இருக்கிறது இருக்கிறது இல்லை இல்லை!
இல்லை இருக்கிறது இருக்கிறது இல்லை;
இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இல்லை!

இல்லை இல்லாமல் இல்லை இருக்கிறது.
இருக்கிறது இல்லாமல் இல்லை இருக்கிறது,
இல்லையும் இல்லாமல் இருக்கிறது இருக்கிறது.
இருக்கிறதும் இல்லாமல் இருக்கிறது இருக்கிறது!
இல்லை இருக்கிறது இல்லை இருக்கிறது.
இருக்கிறது இருக்கிறது இல்லை இருக்கிறது.
இல்லை இருக்கிறது இருக்கிறது இருக்கிறது!
இருக்கிறது இருக்கிறது இருக்கிறதுஇருக்கிறது !

இருக்கிறது இல்லாமல் இருக்கிறது இல்லை;
இல்லாமல் இல்லாமல் இருக்கிறது இல்லை;
இருக்கிறதும் இல்லாமல் இல்லையும் இல்லை;
இல்லையும் இல்லாமல் இருக்கிறதும் இல்லை.
இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இல்லை;
இல்லாமல் இருக்கிறது இருக்கிறது இல்லை;
இருக்கிறது இருக்கிறது இல்லை இல்லை;
இல்லை இருக்கிறது இல்லை இல்லை!

இருக்கிறது இல்லாமல் இருக்கிறது இருக்கிறது
இல்லை இல்லாமல் இருக்கிறது இருக்கிறது;
இருக்கிறது இல்லாமல் இல்லை இருக்கிறது;
இல்லை இல்லாமல் இல்லை இருக்கிறது!
இருக்கிறது இருக்கிறது இல்லை இருக்கிறது;
இல்லை இருக்கிறது இருக்கிறது இருக்கிறது;
இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இல்லை!

''இல்லை இல்லை இல்லை இல்லை!''
இல்லை!
இருக்கிறது!

-(தென்மொழி சுவடி. 9. ஓலை12)

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அடங்கிய கிழமை இதழ்.

1.	தனியிதழ்	விலை	உரு.	00-65
2.	ஆண்டுக் கட்டணம்	,,	,,	36-00
3.	அரையாண்டுக் கட்டணம்	,,	,,	18-00

தொடர்புக்கு : **தமிழ்நிலம்**, 5, அருணாசலத் தெரு, சென்னை-5

பாவலர் **கடவூர் மணிமாறன்** அவர்களின்
நூல் வெளியீட்டு விழா !

கரூர்த் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கருவூர் வட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் செயலாளரும் தனித் தமிழ்ப் பாவலரு மாகிய **கடவூர். ப. மணிமாறன்** அவர்களின் **'விடியல் விதைகள்'** என்னும் பாத்தொகுப்பு நூல் வெளியீட்டு விழா தி. பி. ஆண்டு **2017** கன்னி **21 (7-10-86)** செவ்வாய்க் கிழமை மாலை 7-மணி யளவில் கரூர் சி. எசு. ஐ. சிறுவர் பள்ளியில் மிகச் சிறப்பாக நடை பெற்றது

கரூர்த் தமிழ்ச் சங்கத்தின் சிறப்புத் தலைவர் பாவலர் **நன்னி யூர் நாவரசன்** அவர்கள் விழாத் தலைமை ஏற்க, தமிழ்ச் சங்கத் தலைவர் பாவலர். கா. நா. அரங்கராசன் அவர்கள் வரவேற்புரை நல்கினார்கள்

சீரிய தமிழ்ப் பற்றுளரும் தொலைபேசி இயக்குநருமாகிய திரு. மா. கண்ணதாசன் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார்கள். பின்னர் உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றிய போது, நூலாசிரியரின் தனித் தமிழ்ப் பற்றையும் கற்பனை வளத்தையும், பொதுமை நாட்டத்தையும், மொழி, இன உணர்வு, களையும் யாப்பிலக்கணப் புலமையையும், செயல் திறனையும் பலபடப் பாராட்டிப் புகழ்ந்துரைத்து நூலை வெளியிட்டார்கள்

நெடுநாளைய தென்மொழி அன்பரும் பாவலரேறு அவர்களிடத் தில் பேரன்புகொண்டவரும் குழந்தைகள் நல மருத்துவருமான திரு. **இராமச்சந்திரனார்** தமிழாசிரியார் **அருணா பொன்னுசாமி** க.மு, பாவலர் **கன்னல்** திரு. **மேலை. பழனியப்பன்** ஆகியோர் பாவலரேறு அவர்களிடம் நூலின் சிறப்புப் படிகளைப் பெற்றுப் பெருமை சேர்த்தார்கள்

கருவூர் வட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தலைவர் பாவலர். திரு. ப.எழில்வாணன் அவர்கள் வட்ட உ.த.மு.க.சார் பில் பாவலரேறு அவர்கட்குக் கைத்தறிஆடை அணிவித்து மகிழ்ந் தார்கள். தொலைபேசி இயக்குநர் திரு. மா. கண்ணதாசன் அவர்கள் கொசுவலை ஒன்றைப் பாவலரேறு அவர்கட்குப்பரிசளித் தார்கள்

கரூர் நகர் மன்ற உறுப்பினர்கள் திரு. பரமத்தி சண்முகம், திரு. நா.மணியரசு ஆகியோரும், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திரு. தென்னவன்கோ, திரு. குழந்தை ஈகவரசன், மணவை வட்ட உ. த. மு.க. செயலர் திரு. நாவை. சிவம், குளித்தலை திரு. து. வெள்ள முத்து,

இந்தி மொழியினை இங்குத்திணிப்பது.. பெருந்துயராம்!

—புலவர் **ப. எழில்வாணன்** க. மு., கல். இ.,

1. செறிவுடைய செந்தமிழ் ஈங்கிருக்க வீணே
மருவுடைய இந்தி நுழைதல் - திருவுடைய
இல்மகள் வீட்டில் இழிமகள் எற்பின்றி
அல்முறையில் காலடிவைத் தற்று !

2. இந்தி மொழியினை இங்குத் திணிப்பது
தொந்தி பெருத்த சொரியனை- அந்திக்
குருடரும் ஆணழகன் போட்டிக் கனுப்பிப்
பெருந்துயர் கொள்வதொக்கு மாம் !

3. நந்தமிழ் நாட்டில் தம்மொழிப் பற்றின்றிச்
செந்தமிழை மாய்ப்போர் சிலருண்டாம்;- எந்தமிழர்
அப்படியே அன்னவர்சொல் கேட்பின் இந்திமொழி
எப்படியும் வந்திடுமாம் ஈங்கு !

4. மூத்த தமிழ்மொழி யோடு முறைதவறிப்
பூத்த புதுமொழியாம் இந்தியை- ஏத்தி
நிகரென வைப்பது நெய்விளக் கேற்றிப்
பகலவன் முன்வைப்ப தாம் !

5. இலக்கியங் கண்டே இலக்கணங் கொண்ட
அளக்கிலா அந்தமிழ் தன்னை- விலக்கியே
இந்தி படித்தல் இருநிழல் ஆல்விடுத்தே
குந்திப் பனையடைந் தற்று !

(முன் பக்கத் தொடர்ச்சி)

புலவர்கள் திரு. கவிப்பித்தன், திரு. கலைப்பித்தன், திரு. தமிழ் மணி திரு. பார்த்தசாரதி, திரு. அருணு. பொன்னுசாமி, திரு. காமராசு, திரு. சுந்தரமூர்த்தி, திரு. சுப. இராசகோபால், திரு. இரா. சின்னதுரை, திரு. கண்ணன், திரு. பி. இராமலிங்கம் ஓவியர் பரணன் திரு. தேவராசன், திரு. வடிவேல் உள்ளிட்ட, தமிழன்பர்கள் பலர் திரளாக வருகை நல்கி நூல் வெளியீட்டு விழாவைப் பெரிதும் சிறப்பித்தனர்.

பாவலர் கடலூர் மணிமாறன் அவர்கள் ஏற்புரை ஆற்றிய பின் பாவரேறு அவர்களை நடுவராகக் கொண்ட பட்டி மன்றம் நடைபெற்றது.

-செய்தி கடலூர்மணிமாறன், க. மு.
கடலூர் வட்ட உ. த. மு. க. செயலாளர்

அரும்புகழீர்! ஆர்த்தெழுவீர்!

—கடலூர். **மணிமாறன்**

இலக்கியமும் இலக்கணமும் எந்தமிழ்போல்
இல்லாத மொழியே இந்தி!
நலக்குறைவால் நலிவுற்றோன் மதுக்குடித்துத்
தள்ளாடி வருதல் போலும்
விலக்கிவைக்கும் இழிவார்ந்த விலங்குமொழி
ஏலாத தமிழர் நாட்டில்
கலக்கவந்த எருமையெனக் கடிதுபுகின்
களங்காணத் திரள்வீர் இன்றே!

கடிக்கவரும் வெறிநாயாய்க் காலமெலாம்
தமிழரது குருதி நாடிக்
குடிக்கவரும் நச்சரவாய்க் கனன்றெழுந்த
செந்தீயாய் இந்தி யென்னும்
படிக்கவொண்ணா வடபுலத்தார் பசப்புமொழி
ஆளவரின் தமிழர் வாழ்வும்
முடிந்துவிடும் என்றுணர்வீர்! மூண்டெழுவீர்
மொழிமானம் பெருமை காப்பீர்!

கரவாகத் தமிழினத்தார் கவின்புகழைக்
கருவறுக்கத் துணிந்தார் போலும்!
உரம்வாய்ந்த செந்தமிழை உருக்குலைக்க
ஒழித்துவிடத் தூவும் நஞ்சாய்ப்
பரப்புகின்ற முறைதவறி அதிகாரம்
பயன்படுத்தி இந்தி இங்கே
அரசுரிமை பெறுமாயின் அருந்தமிழும்
அழிவுறுதல் திண்ணமன்றோ?

விரும்பாத ஒருத்தியுடன் இல்வாழ்வை
வேட்கையுடன் நடத்தப் போமோ?
கரும்புமொழி இருக்கையிலே எட்டிக் காய்க்
கசப்புமொழி தேவை யாமோ?
இரும்புள்ளங் கொண்டோரால் மணிமகுடம்
சூட்டுவதோ இந்திப் பேய்க்கு!
அருப்புகழீர்! பெருந்திறலீர்! ஆர்த்தெழுவீர்!
அன்னைமொழி காப்போம் வாரீர்!

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி-ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்குமேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

-அமைச்சர்,

வெளிப்படைப் பொருளும் குறிப்புப் பொருளும்!

—புலவர் ச. சிவசங்கரு, ஏரல்

உலகிலே தோன்றிய மொழிகளில் ஒவ்வொரு சொல்லுள்ளும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் தோன்றும் தன்மையுடையனவாய் பேசப்பட்டும் எழுதியும் வருகிறார்கள் மக்கள். வெளிப்படையாகப் பொருளுணர்த்தும் சொற்கள் நிலம், நீர், தீ, காற்று, வான் என்பன போல எவ்வகை நுட்பமும் இன்றிப் பேசவும் எழுதவும் செய்யலாம். எனவே வெளிப்படைச் சொற்களைப் பற்றி இன்றிக் குறிப்பாகப் பொருளுணர்த்தும் சிலவற்றை இங்கு ஆராயலாம். ''வெளிப்படைச் சொல்லே கிளத்தல் வேண்டா'' என்பது தொல்காப்பியம்.

பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களுமே முதலில் கருத்தறி விக்கத்தோன்றின. பின்புதான் இடைச் சொற்களும் உரிச் சொற் களும், அவற்றுக்கு ஊன்றுகோல் போல உதவிச் சொற்றொடர்களை நிரப்புவனவாம். அவற்றுள் ஒரு சொல் பலபொருளாயும், பல சொல் ஒரு பொருளாயும் புழக்கத்தில் உள்ளன. பேம், நாம், உரும் இவை ''**அச்சம்**'' என்ற ஒரு பொருளில் வருவன.

வரைவு, கூர்மை, புதுமை, விரைவு, விளக்கம், காப்பு, மிகுதி, சிறப்பு, அச்சம் என்பன ''**கடி**'' எனும் ஒரு சொல்லில் மேற்கண்ட பல பொருள்களில் வரும்

குறிப்பாற் பொருள் தோன்றும் :

''தெரிபுவேறு நிலையிலும் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே'' (642) என்பர் தொல்காப்பியர். இக் குறிப்புப் பொருள் பல்வேறு கூறுகளாக அமையும். அவற்றுள் சிலவற்றை இங்குப் பார்க்கலாம்.

நாட்டு வழக்கு :

நாம் பிறரோடு உரையாடும் போது வழக்கத்தில் இக் குறிப்பு ஊடுருவி நிற்கும். எடுத்துக்காட்டாக நண்பர் இருவர் முருகன் என்பவனைத் தேடிக் கொண்டே பேசினார்கள். அச் சமயம் முருகன் அவ் வழியில் வருகிறான் நண்பருள் ஒருவன் அதோ ''புள்ளிக் காரன்'' வந்துவிட்டான் என்றான். இங்கு குறிப்பால் முருகனைப் புள்ளிக்காரன் என்ற சொல்லால் தெரிவித்தான். புள்ளிக்காரன், சாத்தப்பிள்ளை என்ற சொற்கள் மனதுட் குறித்த வேறு பெயருடையவனைக் குறிப்பாகத் தெரிவு படுத்தும். இது கொற்கை வட்டார வழக்கு.

செய்யுள் வழக்குக் குறிப்புகளுள் சில :

கலித் தொகையில் **நல்லந்துவனார்** எனும் புலவரின்

(தொடர்ச்சி 30-ஆம் பக்கம் பார்க்க)

நாடகம் : **[தொடர்-14]**

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்.

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்.)

காட்சி கஅ

உறுப்பினர்கள் : 1. மன்றத்தலைவர் 2. மன்றத்துப் பெரியவர் நால்வர் 3. ஊர்க்கூட்டம் (ஆண்களும், பெண்களும்) 4. கருப்பனன் 5. சிங்கன். 6. சிறுவன் 7. திண்தோளர் இருவர்.

இடம் : ஊர்மன்றம்.

(நிலை. சிங்கன், ஊர் மன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளான். மன்றத்தார் அமர்ந்துள்ளனர். மன்றத்தலைவர் எழுந்து கண்ணையன் கொலை செய்யப்பட்ட குற்றத்தைப் பற்றி விளக்குகிறார்.)

மன்றத் தலைவர்: (எழுந்து) மன்றத்தார்களே ! வணங்குகிறேன். (சிங்கனைச் சுட்டி) இதோ நிற்கும் சிங்கன் கண்ணையனைக் கொலை செய்து விட்டான். கண்ணையனுடைய பிணத்தைப் பார்த்த நம் மன்றப் பெரியோர்கள், அவன் கட்டாரியால் குத்தப்பட்டு இறந்திருக்கிறான் என்று திட்டவட்டமாகக் கூறி விட்டனர். அதனால் சிங்கனை நன்கு உசாவி உண்மையைத் தெரிந்து, நம் மன்றத்தின் முடிவின்படி சிங்கனுக்கு ஒறுப்பு (தண்டனை) வழங்கிட கேட்டுக் கொள்கிறேன். (அமர்ந்து கொண்டார்.)

பெரி 1: (எழுந்து) தலைவரையும், மன்றத்தாரையும் வணங்குகிறேன். தேரறிவு மன்றத்தாரே! கண்ணையனைக் கொலை செய்யும் போது பார்த்தவன் கருப்பனனே. கருப்பனனும் சிங்கனால் தாக்கப்பட்டுக் காயங்கள் உடையவனாய் இருக்க நோக்குகிறோம். இக் கொலையைச் சிங்கன் செய்யும் போது அஃதாவது கட்டாரியால் எறிந்து கொல்லும்போது கண்களால் கண்ட கருப்பனன் அவன் விளத்தங்களை இம் மாமன்றத்தின் முன் சொல்ல வேண்டும்.

கருப்பனன் : (எழுந்து) ஆம் சிங்கன்......

பெரி :2 ...கருப்பனா ! முதலில் மன்றத்தை வணங்கு,

கருப்: சரி, மன்றத்தாருக்கு என் பணிவான வணக்கங்கள். அஃதாவது இறந்த கண்ணையன் என் தோழன். கண்ணையனும் பூக்காரி வள்ளியும் உள்ளங்களீர்க்கக் காதலித்தனர்! நன்கு பழகினர்.

பெரி 2: அவர்கள் இருவரும் காதலர்களென உனக்குச் சொன்னது யார்?

கருப் : என் நண்பன் கண்ணையனே என்னிடங் கூறியிருக்கிறான்.

பெரி 3: கண்ணையன் கூறியதிலிருந்தே, வள்ளி கண்ணையனைக் காதலிக்கிறாள் என்பது தெரியும்...?என்ன?

கருப்: ஆம். கண்ணையன் கூறியதிலிருந்தே தெரியும். கண்ணையனும் வள்ளியும் பழகி வந்ததை நான்......

பரி 4. (சட்டென்று) பழகியென்றால்?

கருப். அஃதாவது ஒருவரோடு ஒருவர் பேசிப் பழகினர்; அதை நான் கண்ணால் பார்த்திருக்கிறேன்.

பெரி 4: சரி, மேலும் சொல்.

கருப்: இப்படியாக இருவரும் பலகாலம் பேசிப் பழகிய பிறகு ஒரு முடிவிற்கு வந்து இப்படியே நாம் பழகுவது சரியில்லை, இருவரும் மணம் செய்து கொண்டு கணவனும் மனைவியுமாக வாழ்வது என முடிவு கட்டினர்.

மன். தலை.: கருப்பனா, கண்ணையனும் வள்ளியும் கள்ளப்பழக்கர் என்பதை நீ யாரிடமாவது சொன்னையா?

கருப்: நான் சொல்லவில்லை.

மன். தலை.: ஏன்?

கருப்: அவன் என் நண்பன்; எப்படிங்க காட்டிக் கொடுப்பது?

பெரி 1: கண்ணையனும் கருப்பனனும் நண்பராய் இருக்கும்வேளை இக் கழுக்கச் செயலை வெளியில் சொல்லமாட்டான். சரி பிறகு...?

கருப்: எங்கிருந்தோ (சிங்கனைச் சுட்டிக் காட்டி) இந்தச் சிங்கன் என்பான் வந்து வள்ளியைக் கைப்பற்றிக் கொண்டான்.

மன். தலை.: அ'தெப்படி உனக்குத் தெரியும்?

கருப்: கண்ணையனோடு வள்ளி காட்டிய அன்பைக் குறைப்பதாய் என்னிடங்கூறி அதனை ஆயும்படியும் கேட்டுக் கொண்டான்.

மன். தலை .: அப்படியானால் வள்ளியைப் பற்றி உனக்கு எதுவும் தெரியுமா?

கருப்: நன்கு தெரியும். அவள் மலரை விட்டு மலர்தாவும் வண்டு போலத்தான்.

மன். தலை.: நீதான், முதலில் சொன்னாய், கண்ணையனும் வள்ளியும் திருமணஞ் செய்து கொள்ள முடிவு கட்டினர் என்று; இப்போது வள்ளியை மலர்விட்டு மலர் தாவும் வண்டு என ஒப்பனை செய்குறாய்?!

கருப்: ஆம், அஃதாவது சிங்கன் வள்ளியைக் கைப்பற்றிய பின் வள்ளி அந்த நிலையை அடைந்தாள் என்றும் சொல்லுகிறேன்.

பெரி 2: கண்ணையனும் வள்ளியும் திருமணஞ் செய்து கொள்ள முடிவு கட்டும் அளவிற்கு அவர்களின் காதல் நல்ல வளர்ச்சி பெற்றதாய்க் கூறினாய்; அப்படியிருக்க, கண்ணையனை வெறுத்துச் சிங்கனை வள்ளி விரும்பக் கரணியம் என்ன?

கருப்: சிங்கன் ஒரு முரடன். வள்ளி அவனுடைய விருப்பத்திற்கு இணங்காவிடில் கண்ணையனையும் வள்ளியையும் கொன்று விடுவதாய் அச்சமூட்டித் தன் பக்கம் இழுத்துக் கொண்டான்; கண்ணையனைக் கொலை செய்ததிலிருந்தே இதை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

பெரி 2: கருப்பனா?

கருப்: ஐயா!

பெரி2: கண்ணையனைச் சிங்கன் கொல்லும்போது நீ ஒன்றுஞ் செய்யவில்லையா?

கருப்: செய்யவில்லையா? என் உயிர் நண்பன் கண்ணையன்! அவனை ஒருவன் கொல்ல வருவதை நான் பார்த்துக் கொண்டிருப்பேனா? தடுத்தேன். சிங்கன் என்னையும் தாக்கினான். (தன் உடலைக் காட்டி) என் உடலில் இருக்கும் இந்தக் காயங்கள் அதற்குச் சான்றுகள். என்னைக் கீழே தள்ளி விட்டுக் கண்ணையனைக் கட்டாரியால் குத்திக் கொன்றுவிட்டான்.

பெரி 2: கண்ணையனைச் சிங்கன்தான் கொன்றான் என்பதைக் கருப்பனன் கூறி விட்டான். இனி கருப்பனன் கூறிய கூற்றில் மறுப்புக் கருத்துகள் இருப்பின், சிங்கன் கூற மன்றத்தார் இசைவு வழங்கலாமா?

மன். தலை.: ஓ. கூறலாமே!

பெரி 2. சிங்கா! இப்போது கருப்பனன் கூறிய விளத்தங்களில் உனக்கு மாறுபாடுகள் இருந்தால் கூறலாம்.

சிங் : (எழுந்து) அறங்கூறும் தமிழ் நெஞ்சங்களே! வணங்குகிறேன். பெண் பிறப்பது சிறப்பென்றான் தமிழன்.

பெண்ணைப் பெருமையாகப் பேணிய இத்திரு நாட்டில், நிறை பொதியில் கழுதை வாய் வைத்தாற் போல, ஆரியர் வரவால் நிறைவான தமிழர் ஒழுக்கங்கள் அழிந்தன. ஆரியர்களின் பழக்கங்கள் பெண்ணினத்தை இழிவாக்குவது. அவர்களின் சீர்கேடான ஒழுக்கங்களும் தமிழர்களுடைய வாழ்வில் புகுந்து இந்நாட்டின் உயர் நெறிகளை அழித்தொழித்தன. அறத்தை உயிரெனக் கொண்டு ஆண்ட தமிழ்மன்னர், ஆரியரின் சிவப்புத் தோலைக் கண்டு மயங்கி விட்டனர். அறத்தைப் பொறுத்தமற்ற தர்மம் என்ற சொல்லால் மறைத்தனர். உருட்டாலும் புரட்டாலும் தமிழர்களை ஏமாற்றி விட்டனர். அவர்கள் சொன்ன தப்பையும் தவற்றையும் தமிழர்கள் தெளியாமல் ஒத்துக் கொண்டனர்.

பெரி 1: சிங்கா! பழங்கதைகள் இப்போது தேவையில்லை. பழைய வரலாறுகள் நமக்குத் தெரியாதலேயே பயனற்ற புதுமையை ஏற்று வெறுமையாக இருக்கிறோம்.

பெரி:2 நீ, சொல்! என்னதான் சொல்லுகிறான். பார்ப்போம்.

கருப்: என்ன சொல்லுவான்! கொலையை மறைக்க ஏதேதோ கத்தி நம்மைத் திக்குத் திருப்புகிறான் சிங்கன்.

பெரி 1: அவன் சொல்வதைக் கடைந்து தெளிய எங்களுக்கு அறிவு உண்டு. அக் கவலை உனக்கு வேண்டாம் நீ சொல்.

சிங்: அற வழி நின்று முறைகாக்கும் புலவர்களே! நான் கொலையை மறைக்கவோ, உங்களைத் திக்குத் திருப்பவோ எண்ணவில்லை. பெண்ணின் ஒழுக்கத்தை இழிவாகப் பேசியக் கருப்பனன் போன்ற கயவர்களை உலவவிடப் பார்த்துக் கொண்டிருக்கிறோமே. அதற்குண்டான கரணியங்கள்தாம் நான் கூறும் கூற்றுகள். வேற்றவரின் பழக்க வழக்கங்களை நாம் ஏற்று மாற்றாரின் கொள்கைகளை உரமிட்டு வளர்த்து வளப்படுத்தியதாலேயே நச்சுப் பழக்கங்கள் நெஞ்சில் புகுந்து நாட்டு நலன்கள் கெட்டன. மக்கள் நலம் பேணுவதைப் போலத் தக்காப் பிக்காப் பேச்சுகளைப் பேசி நொண்டி சண்டிகளாக வாழும் ஏழைகளைச் செல்வர் அடக்கி, ஒடுக்கி, மடக்கி விட்டனர். அறிஞர்களே, ஏழைகள் என்றைக்கும் ஏழைகளாகவே இருக்கிறார்கள். செல்வர்களுக்குக் கையாள்களாக இருந்து கொண்டு கயவர்களும் கள்வர்களும், குடித்துக் கூத்தாடிக் கொண்டு ஏழைப் பெண்களைக் கற்பழித்துப் பண வலிமையால் மறைத்து விட்டுப் பழியை யார் மீதாகிலும் போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்கிறார்கள்.

பெரி 1: போதும், போதும். உன்னிடம் நாட்டைப் பற்றிக் கேட்கவில்லை. கொலையைப் பற்றி தெரிந்தாக

வேண்டும்.

சிங்: நாட்டுக்குள்ளேதான் நாம் இருக்கிறோம். நாட்டு நிலை தெரிந்தால்தானே குற்றத்தைப் பற்றி ஆய்வு செய்ய முடியும். குற்றஞ்செய்ய இந்த நாட்டில் என்ன என்ன சூழல்கள் இருக்கின்றன என்று தெரிந்தால்தான் அந்தச் சூழலில் குற்றஞ் செய்பவன் யார் என்ற முடிவைத் தெரிந்து கொள்ளமுடியும்.

பெரி2: ஆம்! ஆம்! நீ சொல்வதெல்லாம் வாய்மையே இந்த நாடு குட்டிச் சுவராய்ப் போய் விட்டது. நாடு எப்படிப் போனால் என்ன? நாம் வாழ்ந்தால் போதும் என்றிருப்பவர் பெருகி விட்டார்கள். அதனால்தான் இப்படிப்பட்ட குற்றங் கள் மிகுதியாக நடக்கின்றன.

பெரி 1: நாட்டு ஆராய்ச்சி போதும். நீ கொலை செய்தவன் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவன். அதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?

சிங்: நானும் வள்ளியும் காதலர்கள். தேனோடு மாவும் கலந்த தைப் போல எங்கள் உள்ளங்கள் ஒன்று கலந்தன.

கருப்: (சட்டென்று எழுந்து) பொய் பொய். இவனும் வள்ளியும் காதலர்களே இல்லை.

பெரி 2: நில் பேசாதே கருப்பனா, உன்னிடம் கேட்டால் பேசு. சிங்கா நீ சொல்.

சிங்: ஒரு நாள் நாங்கள் களவு நிலையில் ஓரிடத்தில் பேசிக் கொண்டு இருந்தோம். கருப்பனனும் கண்ணையனும் அவ் விடம் தேடி வந்தனர். வள்ளியைப் பிடித்திழுக்க முயன்றனர். நான் தடுத்தேன். அவர்களிருவம் என்னைத் தாக்கினார்கள். நானும் தாக்கினேன். (கருப்பனைச் சுட்டி) இத்தீயன் கருப்பனன் என் மீது வீசிய கட்டாரி குறிதவறிக் கண்ணையன் நெஞ்சில் பாய, அவன் மடிந்தான். இதுதான் கொலை வரலாறு.

கருப்: சீ, புரட்டன். பெரியோர்களே! பேனை எள்ளென்று பிதற்றி, மலைப்பாம்பு புரள்வது போல் புரண்டு, புரண்டு குற்றத்திலிருந்து நகர்ந்துவிட, கண்டமட்டும் உளறுகிறான். வள்ளியை இவனே இழுத்துக் கொண்டு ஒரு வழியாகப் போனான். வள்ளி எங்களைக் கண்டு கையசைத்துக் கூவினான். நாங்கள் இருவரும் தடுத்தோம். நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. சிங்கனுடைய இடையில் இருந்த வாளை எடுத்துக் கண்ணையனைப் பார்த்துப் பாய்ந்து குத்திக் கொன்றான். அவனைக் கொன்ற வாளையும் பாருங்கள். (திண்தோளிருவரைப் பார்த்து) அடே, என்னடா எழுந்து வந்து அந்த வாளைக் காட்டுங்கள்.

திண்தோள் இருவர்: (கையில் வாளுடன் வந்து மன்றத்தின் முன் நின்று) இதோ இதுதான் அந்தக் கட்டாரி.

பெரி 1-2: (வாங்கிப் பார்க்கிறார்கள் பெரியவர் 1.) இதோ சிங்கன் எனப் பிடியில் எழுதப்பட்டுள்ளது.

பெரி 2: (கட்டாரியை உற்றுப்பார்த்து) ஆம். எழுதப்பட்டுத் தான் உள்ளது. ஆனால் கொலை செய்வதற்கென்று வைத்திருக்கும் ஒரு கருவியால், அவனுடைய பெயரை எழுதி வைக்க மாட்டான். தன் பெயரை எழுதிய கொலைக் கருவிகளை இந்நாள்வரை யாவருமே பார்த்திருக்க முடியாது. ஏனென்றால் கொலை செய்தவனை அக்கருவியே காட்டிக் கொடுத்துவிடும். மேலும் இதில் எழுதியிருக்கும் எழுத்துகளும் பழமையானதாகத் தோன்றவில்லை. யாவும் புது எழுத்துகள். எனவே நன்காய்ந்து பார்க்க வேண்டும். எப்படியாயினும் சிங்கன் என்ற இவ்வெழுத்துகளை வைத்து, இக்கருவி சிங்கனுடையதுதான் என முடிவு கட்ட முடியாது.

சிறுவன் ஒருவன்: (ஒரு மடலுடன் வருகிறான். பெரியவர் 1-இடம் மடலைக் கொடுக்கிறான்) தாத்தா ஒருவர் இம்மடலை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்,

பெரி 1: (வாங்கி மடலைப் பிரிக்கிறார்.) இம்மடலைப் படிக்கிறேன் செவிமடுக்க வேண்டுகிறேன். "குற்றமற்ற கல்வியில் சிறந்த பெரியோர்களே! குற்றமற்ற குணக்குன்றன் சிங்கன்! கண்ணையனைக் கருப்பனனே கொன்றவன். இன்னும் ஒரு நாள் இவ்வழக்கைத் தள்ளிப் போட்டு ஞாயம் காணுதல் வேண்டும். சிங்கனை விடுதலை செய்க. வழக்கை நாளை நடத்துக. நான் வந்து விளக்குகிறேன்.

இப்படிக்கு
நலன் வேண்டுபவன்"

பெரி 2: சரி. இம்மடலின்படி வழக்கை நாளை தள்ளி வைக்கலாம். தவறில்லை.

பெரி 1: ஆம். சிங்கா உன் காதலியென்று சொல்லுகிற வள்ளியும் இம் மன்றுக்கு வர வேண்டும்.

பெரி 3: ஆம். ஆம். அவள் வந்தால் அவளிடமும் சில குறிப்புகளைக் காண முடியும்.

பெரி 2: சரி சிங்கா. நீ போகலாம். நாளை வள்ளியோடு இம் மன்றுக்குத் தவறாது வந்து சேர வேண்டும்.

சிங்: (வணங்கி) வணக்கம். நல்லது. (போய் விடுகிறான்) (மன்றம் கலைகிறது. கருப்பனன் சிங்கனை முறைத்துப் பார்த்துக் கொண்டு போகிறான்)

(-தொடரும்)

வெற்றி கொள்வேன்! பாவலர். இளஞ்சித்திரன்

இந்தப் பிறப்பில் எனக்கொரு வாழ்க்கை !
இனிதான் தொடக்கம் ! இறந்திட மாட்டேன் !
சொந்த நலன்களைத் தூக்கி எறிவேன் !
சோர்ந்தொரு மூலையில் சுருண்டிட மாட்டேன் !
சந்து பொந்தெனத் தயங்கிட மாட்டேன் !
தனியன் என்றுபின் தங்கிட மாட்டேன் !
முந்து தமிழை முழக்கி வருவேன் !
முடுக்குவன் தமிழரை முழுவிடு தலைக்கே !

இந்த நிலத்தில் எனக்கொரு கடமை !
இனிமுடித் திடுவேன் ! இருந்ததில் விலகேன் !
சொந்தம், மக்கள், சுற்றமும் மறப்பேன் !
சொத்தும் பத்தும் தொகுக்க நினையேன் !
மந்தப் பயலாய் வயிற்றை வளர்த்து
வாழ்ந்து மடிந்தே மறைந்திட மாட்டேன் !
சிந்தைத் தமிழைத் தெருவெலாம் முழக்கிச்
செலுத்துவன் தமிழரைச் சீர்விடு தலைக்கே !

இந்த உடலில் எனக்கொரு கொள்கை,
இயக்கம் இனிதான் ! இளைத்திட மாட்டேன் !
எந்தை, அன்னை இவர்களின் மேலாய்
எனது தமிழை இனத்தை நினைப்பேன் !
பொந்தி வராத பொய்முக நண்பர்
புறம்விட் டகல்வேன் புதுத்தெம் போடு!
சிந்துத் தமிழைத் திசையெலாம் பரப்பிச்
சேர்ப்பேன் தமிழரைத் திகழ்விடு தலைக்கே !

இந்த உயிர்ப்பில் எனக்கொரு குறிக்கோள் !
எதிலும் வழுவேன் ! இழிந்திட மாட்டேன் !
எந்தப் பகையும் என்னைஎன் செய்யும் ?
எதற்கும் அஞ்சி இடிந்திட மாட்டேன் !
மந்தைத் தமிழர் மனத்தினில் புரட்சி
மானத் தீயை வளர்ப்பேன் ! அவரைக்
குந்தி ஒன்றாய்க் கூட்டி வருவேன் !
கொண்டு தருவேன் விடுதலை அவர்க்கே !

இந்த வாழ்க்கையில் எனக்கொரு நோக்கம் !
இருந்து முடிப்பேன் ! இலக்கை அடைவேன் !
வந்த வடமொழி வழக்கை, மரபை
மாற்றித் தமிழர் வாழ்வைச் செய்வேன் !
இந்திக் கேற்றம் என்பதை ஒப்பேன் !
என்தமிழ் அரசை இங்கே அமைப்பேன்
வெந்து புழுங்கேன் ! வேங்கை எனநான்
விரைந்தினிப் பாய்வேன் ! வெற்றிகொள் வேனே

இராமன் பிறந்த இடம்; வரலாறு என்ன சொல்கிறது?

(இராமனின் பிறந்த நிலம் குறித்துப் பேராசிரியர் ஆர். எல். சுக்லா எழுதியுள்ள நீளமான ஆய்வுக் கட்டுரையின் முகாமையான பகுதிகளை மட்டும் இங்கே தந்துள்ளோம்.)

ஃ ஏறத்தாழ ஐந்தாம் நூற்றாண்டில் குப்தர்களின் ஆட்சிக் காலத்தில் கிடைக்கும் இராமயணத்தில் 24,000 சொலவகங்கள் (சுலோகங்கள்) உள்ளன. ஆனால் தொடக்கத்தில் -அஃதாவது வால்மீகி எழுதிய இராமயணத்தில் வெறும் 6000 சொலவகங்கள் தான் இருந்தன. இவை பிறகு 12,000 பிறகு 24,000 என்று பெருத்துக் கொண்டே போனது. இதில் வேடிக்கை என்ன வென்றால் தொடக்கக்காலத்திலும் இறுதியிலும் 'புகுத்தப்பட்ட'ன சொலவகங்கள் எவை; இடைக்காலத்திலும் இறுதியிலும் 'புகுத்தப்பட்ட' சொலவகங்கள் எவை என்பன இன்றுவரை யாருக்கும் தெரியாது.

ஃ இராமயணம் போன்ற இதிகாசத்தில் பண்டைய இந்தியாவின் நாகரிகம், பண்பாடு, குமுக வாழ்க்கை பற்றி நாம் அறிய முடிகிறது என்பது உண்மை! ஆனால் அவற்றைக் கொண்டு அரசியல் வரலாறு எழுதுவது முடியாத செயல். இராம-இராவணப் போர் குறித்து இதுவரை தொல்பொருள் துறையினர்க்கு எந்தச் சான்றுமே கிடைக்கவில்லை.

வரலாற்று ஆராச்சியாளர்கள் உண்மை உறுப்பினராக நினைத்து கி. மு. 2500-இல் இராமன் வாழ்ந்ததாக கூறுகின்றனர். இதை அடிப்படையாகக் கொண்டு நாம் ஆராய்வோம். இராமன் பிறந்து வளர்ந்து திரிந்த இடங்கள் என்று எந்தெந்தஇடங்கள் இராமாயணத்தில் வருகின்றனவோ அங்கெல்லாம் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் கி. மு. 2500-இல் மாந்தர்கள் வாழ்ந்ததற்கான எந்த அடையாளமும் கிடைக்கவில்லை. இராமன் பிறந்ததாக இன்று கூறப்படும் அயோத்தியிலும், அலகாபாத்தில்இருந்து 35 கி. மீ. தூரமுள்ள சிரங்வீர்பூரிலும் மற்றும் பரத்வாச் பாழிப் பகுதியிலும் பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டன; அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டன. கி. மு. 600 இல் வாழ்ந்த மாந்தர்கள் பற்றிய அடிப்படைகள்தாம் கிடைகின்றனவே தவிர அதற்கு முந்திய கால கட்டம் பற்றி எந்தச் சான்றும் கிடைக்கவில்லை.

ஃ அயோத்தியில் மாந்தர்கள் வாழத் தொடங்கிய காலம் வரலாற்று ஆராய்ச்சியாளர்களால் ஏறத்தாழ உறுதிப்படுத்தப் பட்டு விட்டது. இந்தக் கணிப்புக்கும், இராமன் வாழ்ந்ததாகக் கூறப்படும் காலக்கட்டத்திற்கும் இடையே ஏராளமான முரண்பாடுகள் உள்ளன.

ஃ ஓரிடத்தில் ஆட்சி நிறுவப்படுகிறது எனில், ஏற்கனவே அங்கு மக்கள் வாழத்தொடங்கியிருக்க வேண்டும்; வேளாண்மை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஆரியப் படுத்தப்பட்ட கலைகள்- வில்லிசை

-அதியமான்

பார்ப்பனச் சாதியைச் சார்ந்த முத்துப்பட்டன் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த சக்கிலியப் பெண்களை மணந்தது இழிவு என்றெண்ணிய பார்ப்பனரும், அவர்களின் அடிமைகளும் சேர்ந்து கீழ்க்காணும்படி மாற்றிப் பாட வைத்தனர். அந் நூலின் பக்கம் 15-இல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றம்.

''முத்துப் புலவர் என்னும் வில்லுப் பாட்டுப் புலவர் பாடி வரும் வில்லுப்பாட்டைக் கவனிக்கலாம். அவருடைய பாட்டின் படி பொம்மக்காவும், திம்மக்காவும் பிறப்பில் சக்கிலியப் பெண்கள் அல்லர். அவர்களுடைய பிறப்பு வியப்பானது. ஒரு பிராமணர் வீட்டில் பசுவொன்று இரவோடு இரவாய் எருக்குழிக்குள் விழுந்து இறந்தது. அவர் காலையில் அதைக் கண்டு பசு இறந்ததைக் கண்ட கரிசத்தைத் தொலைக்கக் காசிக்குப் போய் விட்டார். அவர் மனைவி பாவம் தீர உபவாசங்களிலிருந்து சிவபிரான் அருளால் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றார். இவற்றைத் தான் வளர்த்தால் ஊரார் பழிதூற்றுவார்களென்று காட்டில் விட்டுவிடச் செய்தாள். காட்டில் ஒரு நாகம் குழந்தைகளைக் காப்பாற்றிற்று. வாலப் பகடையும் அவன் மனைவியும்

(முன் பக்கத் தொடர்ச்சி)

தழைத்திருக்க வேண்டும். அப்பொழுதான் ஆட்சியாளர்கள் வரி தண்டுதல் செய்து ஆட்சி நடத்த முடியும். இவையெல்லாம் இல்லாமல் ஓர் ஆட்சியைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாது. வரலாற்று ஆய்வாளர்களின் கணிப்புப்படி இராமன் வாழ்ந்தது கி. மு. 2500 எனில், அக்காலக் கட்டத்தில் அயோத்தியில் மக்கள் வாழத் தொடங்கவே இல்லை. மக்களே இல்லாமல் இராமன் யாரை ஆட்சி செய்தான்?

ஃ வால்மீகி இராமாயணத்தில் அயோத்தி சரயூ ஆற்றின் தெற்கே வெகு தூரத்தில் இருந்ததாகவும், சரயூ ஆறு மேற்கு நோக்கி ஓடிக்கொண்டிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் தற்போதுள்ள அயோத்தி சரயூ ஆற்றிங் கரையில் மிக அருகே அமைந்திருப்பதுடன் அந்த ஆறு கிழக்கு நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது. மேலும் சரயூ ஆறு கங்கையில் கலப்பதாக இராமாயணம் கூறுகிறது. ஆனல் இன்றைய சுரயூ,ராப்தி ஆற்றுடன் கலக்கிறது.

ஃ இந்திய அரசும் சிந்திக்கும் திறனுள்ள மக்களும் இந்த உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். இராமன் பிறந்த நிலம் என்ற பொய்யான வசதியான திரைக்குப் பின்னே வகுப்புக் கலவரத்தைத் தூண்டி விடும் சில கொடுமை இயக்கங்களின் வெறிச் செயல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்,

நன்றி: 'சமரசம்' 16-31 சூலை'86 தமிழில் : முசப்பிக்கா

அவ்வழி போகும் பொழுது குழந்தையைக் கண்டெடுத்து வளர்த்தனர்.''

பார்ப்பனரும் அவர்களுடைய அடிமைகளும் தமிழர்களுடைய கதைகளைப் பார்ப்பனியத்திற்கு மாற்றி அறிவிற்குப் பொருந்தாத கருத்துகளைத் திணித்து வருகிறுர்கள் என்பதற்கு இக் கதையை உண்மை நிலையிலிருந்து மாற்றியமைத்தது ஓர் எடுத்துக் காட்டு. ஓர் ஆணும் பெண்ணும் இல்லறம் நடத்துகையில் உடலுறவிலேயே பிள்ளைகள் பிறக்கும் என்ற இயற்கையைக் கூட மறுத்து உண்ணு நோன்பிருந்து பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற மூட அறிவைப் பரப்பி வருகிறுர்கள். இன்னும் இவ்வகை மூடக் கருத்துகளைப் பாடும்படி கூறிக் கேட்டு நம்புபவர்களை முண்டங்கள் என்றுதான் கூற வேண்டும். சாதிகள் மறைந்து விடலாகாது என்று பார்ப்பனர்கள் நினைக்கிறுர்கள். அதையும் தமிழர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறுர்கள். பின் எங்கே தமிழர்களிடம் ஒற்றுமையைக் காண இயலும்?! தமிழர்களுடைய கலைகள் ஆரியப்படுத்தப்படுகின்றன' என்று பாவலரேறு அவர்களின் கூற்று எவ்வளவு உண்மை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னும் இக் கதையில் சில மூடக் கொள்கைகளைப் பரப்ப வேறு சில மாற்றங்களையும் செய்திருக்கிறுர்கள். நெல்லை மாவட்டம் தச்சநல்லூர் செல்வத்தாயம்மாள் (ஐயை வில்லுப் பாட்டுப் பாடகி) முன்னுல் பாடிய இக் கதையையும் கீழே தருகிறேன்.

''கல்லிடைக்குறிச்சியில் (இங்குப் பார்ப்பனர்கள் மிகுதியாக வாழுகின்றனர்) சுப்புக்குட்டி ஐயர், சுந்தராய்ச்சி என்பவர்கள் கணவனும் மனைவியுமாக வாழ்ந்து வருங்கால் ஒரு நாள் சுப்புக்குட்டி ஐயர் காசிக்குப் போய் விட்டார். அந்த நாளில் கல்லிடைக்குறிச்சிப் பார்ப்பனத்தியர் அனைவரும் சேர்ந்து ஔவையார் நோன்பு இருந்தனர்.

பாட்டு

சம்பா நெல்லெடுத்து
தகுந்தபடி குற்றலுற்ருர்
மாவிடித்துக் கொழித்து
மாப்பலகாரம் செய்தார்
மாப்பிள்ளை மஞ்சள்பிள்ளை
மங்கையர் பிடித்துவைத்து
ஔவையார் பிள்ளையினை ஆய்ச்சியர்
பிடித்து வைத்தார்

(அரிசி மாவிலும் மஞ்சளிலும் பிடித்து வைத்து வணங்குவர் எனக் கேள்வி)

உரை

ஔவையார் நோன்பு இருந்தனர். விடிந்து வெகு நேரமாக ஔவையார் நோன்பிருந்தனர். ஆய்ச்சியர் ஒருவருக் கொருவர்

நேரம் விடிந்து விட்டதே. இ'து ஆடவருடைய கண்களுக்குப் படக் கூடாதே என்று சுந்தராய்ச்சியிடம் மற்ற ஆய்ச்சியர், 'அடியே இந்த மாப்பிள்ளை மஞ்சப் பிள்ளையைக் கங்கை (எந்த ஆற்றையும் கங்கை என்றே அழைப்பது வில்லுப்பாட்டுக்காரர் களின் மரபு)யில் கொண்டுபோய்க் கரைக்க வேண்டும். அ'து என் பொறுப்பு' என்று சொல்லிவிட்டு, ஆய்ச்சிமார்கள், அவரவர் ஆத்துக்குப் (அகத்திற்கு என்பதை ஆத்துக்கு எனப் பேச்சு வழக்கில் கூறுகின்றனர்) போய் விட்டார்கள். சுந்தராய்ச்சி பார்த்து மாப்பிள்ளை, மஞ்சள் பிள்ளைகளைக் கையால் பிடித்து வைத்த பிள்ளை கங்கையில் கரைப்பது எப்படி? தெருவில் ஆண்கள் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து, அவள் இவற்றைக் கங்கையில் கரைக்க முடியாது. (பொருனை ஆற்றைப் பார்ப்பனர் கங்கையென்று வடநாட்டின் ஆற்றுப் பெயரை வைத்தே அழைக்கிறார்கள்) என்று மனத்தில் எண்ணி, இரண்டையும் சாப்பிட்டு விட்டாள். அன்று முதல் ஔவையின் திருவருளால் கருவுற்று இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். காசிக்குப் போன கணவன் வந்தால் கடுந்தொல்லை (ஆபத்து) யாகிவிடும் என்று எண்ணிய அந்த சுந்தராய்ச்சி மருத்துவச்சியிடம் இரு பெண் குழந்தைகளையும் ஐயன் சொரிமுத்தன் காலில் கொண்டுபோய்ப் போடக் கூறிக் கொடுத்துவிட்டாள். மருத்துவச்சி அவ்வாறே அக் குழந்தைகளைக் கொண்டுசென்று போட்டுவிட்டாள். அவ்வழியே சென்ற வாலப் பகடையும், அவன் மனைவியும் குழந்தையை எடுத்து வீட்டிற்குக் கொண்டுசென்று வளர்த்தனர். இவ்விரு குழந்தைகளே பொம்மக்கா, திம்மக்கா என்பவர்கள். இவர்கள்தாம் முத்துப் பட்டன் என்ற பார்ப்பானுக்கு மனைவியானார்கள்.

ஏன் கதையை இப்படி மாற்றினார்கள்? பார்ப்பான் ஒருவன் சக்கிலியப் பெண்ணை திருமணஞ் செய்து கொண்டதாய்ப் பாடுவது, இழிவு என்பதை மாற்ற பிராமணத்திற்குப் பிறந்தவர், பொம்மக்கா, திம்மக்கா என்பவர்கள், என்று மாற்றி, வில்லுப் பாட்டுக் கலைஞர்களைப் பாடவைத்து விட்டனர். சுந்தராய்ச்சி கணவன் இல்லாமல் எப்படிப் பிள்ளைகளைப் பெற்றாள் என்று எந்த தமிழனாவது கேட்டானா? சுந்தராய்ச்சியின் கணவன் காசிக்குப் போனபிறகு சுந்தராய்ச்சி வேறு எவனோடாகிலும் தொடர்பு கொண்டு கருவுற்றுப் பிள்ளையைப் பெற்றிருக்க வேண்டும். எனவே கணவன் வந்தபின் தொல்லையாக முடியும் அக் குழந்தை களை வீசி எறிந்தாள் என்று கதையை மாற்றினால் உண்மை வெளிவந்துவிடும். அதன் பிறகு இல்லை...இல்லை திம்மக்கா பொம்மக்கா இருவரும் சக்கிலியப் பெண்களே என்று ஒப்புக் கொள்வர். எனவே திரு. வானுமாமலை அவர்களின் ஆய்வுப்படி உண்மையிலேயே சக்கிலியப் பெண்களைத்தாம் முத்துப்பட்டன் என்ற பார்ப்பான் திருமணஞ் செய்துள்ளான் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

இதுவரை தமிழர்களுடைய கலைகளில் ஒன்முன வில்லுப் பாட்டுக் கதைகளைப் பார்ப்பனர்கள் முத்துப்பட்டன் கதையைப் போல மாற்றித் தமிழர்களை முட்டாள்களாக்கிக் கொண்டு வரு கிறார்கள். இப்படி ஆரியப்படுத்தப்பட்ட வகைகளை உணர்ந்து, திருவாளர்கள் பிச்சுக்குட்டி, சிவக்குளம், தங்கையா போன்றவர்கள் தமிழ் இலக்கியங்களையும் நாட்டு விடுதலைக்காகப் பணியாற்றிய தலைவர்களுடைய வாழ்க்கை உயர்வுகளையும் பாடிவந்தனர். ஆனால் தமிழர்கள் இவர்களை அழைத்துப் பாடக் கேட்பது கிடையாது பல ஆண்டுகள இம் முயற்சியில் வெற்றிகிட்டலாம் என்றெண்ணி ஏமாறி, இவர்களும் இறுதியாகப் புராணக் கதைகளையே பாடிக் காட்டத் துணிந்து விட்டனர். அதன் விளைவாக திருவாளர் பிச்சுக் குட்டி அவர்கள் திருவாடுதுறை சிவனிய மடத்துப் புலவராக அமர்த்தப்பட்டார்கள். அவரும் சைவ குரவர்களைப்பற்றியும் புராணங்களைப்பற்றியும் பாடிவந்தார். இவருக்குப் பார்ப்பனரும், பார்ப்பன அடிமைகளும் நல்ல பணம் கொடுத்து வாய்ப்புகள் அளித்துத் தம் பக்கத்தைவிட்டுப்போய்விடாதபடி மிகக் கவனமாகக் காத்துக் கொண்டனர். ஆரியப்படுத்தப்பட்ட வில்லிசை ,தமிழ் படுத்தப்பட எடுத்துக் கொண்ட முயற்சி தோல்வி அடைந்து விட்டது.

இப்படித்தான் தமிழ்க் கலைஞர்கள் எல்லோரும் பார்ப்பனீயத்தைப் பற்றி அவர்களுடைய புகழையும் பாடிவருகின்றனர். இதில் ஒரு வியப்பான செய்தியையும் கூறியாகல் வேண்டும். பார்ப்பனர் பண்பாடுகளைப் பற்றிப் பாடும் கலைஞர்கள் யாவரும் தமிழர்களே. அவர்களுக்குக் கதைப்பாடல்களை அமைத்துக் கொடுப்பவர்களும் தமிழர்களே. அக் கதைகளைக் கேட்பவர்களும் தமிழர்களே. பார்ப்பனர்களுடைய கதைகளைப் பாடியதற்காக வழங்கப்படும் பணங்கள் யாவும் தமிழர்களுடையவே. பார்ப்பனர் கதைகளைப் பாடியதற்காகக் கலைஞர்களுக்கு வழங்கிடும் பரிசிலர்கள் அனைவரும் தமிழர்களே! பார்ப்பனர்கள் தங்களுடைய வரலாறுகளை மூடக் கொள்கைகளைத் தமிழர்களிடம் பரப்ப தமிழர்களைக் கொண்டே தமிழர்களுடைய பணச் செலவிலேயே செய்து வரு கிறார்கள்.

இச் சூழ்ச்சிகளைக் கண்கூடாகத் தமிழர்கள் கண்டும், அவர்களுக்கே அடிமைகளாகி விடுகிறார்கள். தமிழ் இலக்கியங்களை, தமிழர் நாகரிகங்களைப் பற்றி பாடும் கலைஞர்களுக்குத் தமிழர்களிடம் ஆதரவு இல்லை. தமிழர்களில் பலர் இன்னும் பார்ப்பனரை ஐயர் எனவும், அவர்கள் தெய்வத்தன்மையுடைவர்கள் என்று அவர்களைச் சாமி என்றும் அழைப்பதைக் காணலாம். தமிழர்களுடைய வீடுகளில் நடக்கும் திருமணங்களிலிருந்து இழவு வீடுவரை அவனை அழைத்து, அவன் கால்களில் விழுந்து தங்களுடைய சுட்டங்களையெல்லாம் கொட்டி அளிக்கிறார்கள்.

தந்தை பெரியார் இத் தமிழ்நாட்டில் உலாவருங்காலத்தில் இச் செயல்கள் சற்று குறைந்திருந்தன. இப்போது மீண்டும் பார்ப்பானை அழைத்தே திருமணம் முதல் இழவுவரை நடத்த வேண்டும் என்று நடத்துகிறார்கள். இச் செயல்களுக்குப் பார்ப்பானைக் குறைகூறிப் பயனில்லை. பார்ப்பனியத்தை மாந்தனுடைய வாழ்விற்கு வழிகாட்டியென்றெண்ணும் தமிழர்களைத் தாம் குறைகூற வேண்டிவருகிறது.

மிகச் சிறந்த இலக்கியச் சுவையுடைய கதைகள் தமிழில் உண்டு. இன்னும் தூய தமிழில் எழுதப் படுகிற இலக்கியங்களும் மிகுதியாக உண்டு. அவையாவும் உலகமாந்தர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய கருத்துகள் நிறைந்தவை. அவற்றையெல்லாம் தமிழகத்தில் பரப்பவேண்டும். ஆனால் அத்தமிழ்ச் சுவைகளை விரும்பும் தமிழர் கூட்டங்கள் இல்லையே! பின் ஏன் பர்ப்பனர்கள் தமிழர் கலைகளை ஆரியப்படுத்த மாட்டார்கள் பேசிக்கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பது போல, தமிழ் இலக்கியங்களைக் கலைகளில் அமைத்துத் தமிழர்களிடம் பரப்பும் முயற்சிகளில் தமிழர்கள் முழுமூச்சாக இறங்க வேண்டும். ஐவருக்கு ஒரு மனைவி கதை. இராவணனை இழிவு படுத்தி மனைவியை ஐயங் கொண்ட இராமனின் கதைக் கொடுமைகளைச் செய்து காட்டும் சிறு தெய்வங்களைப் பற்றிய கதைகளைப் பாடக் கூடாது. தமிழர்கள் அக் கதைகளைக் காதாலும் கேட்பது அறியாமை என்றுஉணர்தல் வேண்டும். இன்னும் தமிழர்களுடைய கலைகள் ஆரியப் படுத்தப்படுவதை தடுககவில்லையென்றால் நாம் தமிழர்கள், நாகரிகத்தில் உயர் வானவர்கள் என்று சொல்லிக் கொன்டிருப்பதில் எவ்வகை உண்மையும் இருக்கமுடியாது. தமிழுக்கும்தமிழர் இனத்திற்கும் நல்ல காலம் பிறக்க வேண்டுமானால் தமிழர்களுடைய கலைகள் யாவும் தமிழ்க் கலைகளாக வாழவேண்டும். அல்லாக்கால் தமிழ்க்கலைகள் பார்ப்பனர்களால் ஆரியப்படுத்தப்பட்டுத் தமிழினம் கலைகளாலேயே வீழ்ந்துபடும். தமிழ் இனம் இலங்கையில் அழிவதைக்கண்டும் எந்தப் பார்ப்பானாவது கவலைப்பட்டு ஒரு சொல்லாகினும் சொல்லுகிறானா? மாறாக மகிழ்ச்சியோடு இருக்கிறான்.

தமிழா! உன் கலைகள் ஆரியப்படுத்தபபடுகின்றன. உன் மொழி தமிழ்; இந்தியால் தாக்கப்படுகிறது. உன் உயரிய பண்புகள் பழக்க வழக்கங்கள் யாவும் பார்ப்பனியமாக மாற்றப்படுகின்றன. உன் சமயம் இந்து என்னும் பெயரால் இழிவுபடுத்தப்படுகிறது. உன்இனம் ஆரியனால் தந்திரமாக அழிக்கப்படுகிறது. உன்னிப் பார்! எண்ணிப்பார்! எழுந்து நில்; அல்லாக்கால், உன்மொழி, உன் இனம், உன் நாடு ஆகிய மூன்றையும் இழந்து தவிப்பாய்!

உனக்காக உலகில் யாரும் இரங்கப் போவதில்லை ஏன் தெரியுமா? உன்னை நீயே அழித்துக் கொள்கிறாய்! ●

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இன்துணை நீநீப்ப இரவினுள் துணையாகித்
துணைப்பிரிந் தயாஅம் தனிக்குருகு உசவுமே
ஒண்சுடர் ஞாயிற்று விளக்கத்தான் ஒளிசாம்பும்
நண்பகல் மதியம் போல் நலம் சாய்ந்த அணியாட்கு"

எனும் பாட்டு ஒன்று உளது. அணியாட்கு என்பதை அணியை உரையாட்கு என்றுதான் நாம் பொருள் செய்வோம். இங்கே, நண்பகல் காலத்தில் ஒளியிழந்த நிலவு போல ஒளி சாம்பிய முகமுடையாட்கு என நச்சினார்க்கினியர், அணி என்ற சொல்லுக்கு "முகம்" என்று பொருள் கண்டார். அணி என்ற சொற்கு முகம் என்ற பொருள் இல்லவே இல்லை. "மதியம் போல் நலம்" என்ற உவமை அடைமொழிச் சிறப்பால் அணிக்கு, முகம் என்ற குறிப்பை உணர வைக்கும் திறம் வியத்தற்கு உரியதேயாம்.

பாடல், பொருள்வழிச் சூழலிலும் குறிப்பு உண்டு. எவ்வகை அடைமொழியும் இன்றிப் பாடல் தரும் சூழல் காரணமாக "அழல்" என்னும் சொல் தீயைக் குறிக்க வேண்டியது இருக்க, காமத் தீ என்ற அடை பெற்றுக் குறிப்பாகிறது. அது நெய்தற் கலியில், "எழிலெஞ்சு மயிலின் நடுங்கிச் சேக்கையின் அழலா கின்றவர் நக்கதன் பயனே" அழல் எனும் தனிச்சொல் சூழலால்பொருள் தரும்போது காமம் என்ற அடையினைத்தானே பெற்றுக் காமத் தீ எனும் குறிப்பை நல்குகிறது.

இனி, "இறைச்சி" எனும் நுண் குறிப்புப் பொருளையும் சிறிது காணலாம்.

"இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே... என்ற தொல்காப்பிய நூற்பா, இலக்கியத் திறன்வாய்ந்த நுண்ணறிவாளர்க்கே தெளிவாம் என்ற கருத்தை இறைச்சிப் பொருள் கண்பார்க்கு அறிவுறுத்துகிறது.

"இலங்கும் அருவித்தே இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள் பேணான் பொய்த்தான் மலை" (குறிஞ்சிக்கலி 5)

தலைவியிடம் பிரிந்து சென்ற தலைவன் இந்த நாள் வருவேன் என உறுதிமொழி (சூள்) கூறிச் சென்றவனை இன்னும் வாராமையால் மனம் குமுறிய தலைவியின் கூற்று, இது.

தலைவன் மலைநாட்டில் அருவி, அந்நீரால் விளையும் பொருள் களின் செழிப்பு முதலியன கண்ட அத் தலைவி, அவ்வழகிய காட்சி யைக் கண்டதோடு அமையாது, அவள் உட்கோளாக என்ன நினைத்தாள் என்பதைப் பாவலர், நுண்ணிதாய் நாம் அறியக் காட்டுகிறார். சூள் பேணாது பொய்த்தவனுடைய மலையில் இத் தகைய வளம் இருக்க இயலுமா? இவ் வளமார்ந்த காட்சியில் இருந்தே தலைவன் பொய் சொல்ல மாட்டான்; பொய் சொல்லி அறம் பிறழ்ந்தவனாயின் அவன் மலையில் இத்தகைய வளம் இராது"

என்று அவள் உணர்த்துவதாகச் சொல்லிய பொருளுக்குப் புறம்பாக ஒரு கருத்தை நாம் உணர வைக்கிறார். இத்தகைய குறிப்பை வடநூலார் **தொனி** என்பர். அஃதாவது, ஒரு மணியை அடித்தால் அதனோடு இணைந்து மென்மையாகத் தொடர்ந்து, புறத்துள்ளார் அறிய வரும் ஓசை என்பதாம். ஆனால் வடவர் இத் தொனிப் பொருள் அகம், புறம் எல்லாவற்றுக்கும் வரும் என்பர். அன்பின் ஐந்திணையில் மட்டுமே இவ் விறைச்சிப் பொருளும் தோன்றும் என்பது தமிழ் வழக்கு.

உள்ளுறை உவமம் :

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்" (தொல்- 994)

"உவமப் போலி" என்றும் வழங்குவார் உள்ளுறை உவமத்தை.

எடுத்துக் காட்டு :

போற்று ஒழுக்கத்தைக் கைவிட்ட நல்லவனாகிய தலைமகன் ஒருவன், மனையாளோடு நன்கு வாழும் போது, 'யான் தவறான நடத்தையில் இருந்தபோது என்னைப்பற்றி யாது நினைத்தீர்' என்று கேட்டான். விடையாகத் தோழி கூறு முகத்தால், **ஓரம் போகியார்** என்ற புலமைச் செல்வர் **ஐங்குறு நூற்றில்** முதற் பாடலாக—

"வாழி யாதன் வாழி யவினி
நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே, யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணரூரன் வாழ்க அவன்
பாணனும் வாழ்க எனவேட் டோமே."

"மாதவர் நோன்பும் மடாவார் கற்பும் காவலன் இன்றெனில் இன்றால்" என்பதால் ஆதன் அவினி எனும் வேந்தன் நல்ல செங்கோன்மையோடு வாழ்வானாக, வருவிருந்தினரை ஓம்புதற்கு நெய் முதன்மை பெற்றது; ஆதனால் நெய் பல பொலிக என்றும், பிறருக்கு உதவி செய்வதே வாழ்வு என்ற கடைப் பிடியால் பொன் பெரிது சிறக்க எனவும், இல்லறம் முட்டில்லாது நடத்தற் பொருட்டுத் தாய்மைத் தன்மை பெற்ற தலைவி அதனையே நினைத்திருந்தாள்.

'ஆண்டு முழுதும் புது வருவாயுடைய தலைவனாகிய நீ, வானளாவிப் பூத்துக் குலுங்கி நன் மணம் பரப்பும் காஞ்சி மரங்களையும், பொய்கைகளிலே, நாற்றமுடையதாய், முட்டைகளைக் கருவிலே ஏற்றதாய் ஓடியாடும் சிறிய மீன்களும் உடைய நீர்ச் செழிப்புடைய வளமான நாட்டை உடையவன் வாழ்க!' என்று வாழ்த்துதலை விரும்பி இருந்தோம். "பாணரும் வாழ்க" என்றது இழித்தல் குறிப்பு,

(1) "நனைய காஞ்சி" பூத்து மணக்கும் பூங்கொத்துகளைக் கொண்டு வானளாவி வளர்ந்திருப்பது காஞ்சிமரம். அது போல,

புகலால் பொலிந்து விளங்கும் உயர்குடிப் பிறப்பினை உடையன் தலைவன் என்பது.

(2) "சினைய சிறுமீன்" நாற்றமும், சினையும் உடையது சிறு சினைமீன். அது போல 'உன்னுடைய கருப்பத்தை உடைய பரத்தைக் கூட்டுறவால் உன் புகழ் மங்கி இழிவான பழிச் சொல்லுக்கு உன்னை உட்படுத்திக் கொண்டாய்'- என இந் நான்கு சொல்லையும் கருப் பொருளைச் சொல்வதுபோல அவன் நிலையைக் குறிப்பால் உணர்த்திய சொல்விளையாட்டு சான்றோர்க்கு இயல்வதேயாம்.

(3) இனி அவனை வாழ்க என்றது, நீ களவுக் காலத்தில் "நின்னிற் பிரியேன்" என்று அளித்த சொல்லுறுதி அவர் கூட்டால் பொய்த்து விட்டது. அறம் பிறழ்ந்தவர்க்கு அறக் கடவுளே பிற்பகல் தாக்கம் செய்து விடுதலும் உண்டே! அது தாக்காமை, நீ நலத்தோடு வாழ்வாயாக என்று வாழ்த்தினாள் ஆகிய குறிப்புகளையே உவமப் போலி எனவும், உள்ளுறை எனவும் நுண் சுவைஞர்கள் கருதி மகிழ்வாராயினர்.

வெட்டொன்று துண்டு இரண்டு என்றவாறு கண்ணோட்டமின்றிப் பேசுவது நன் மக்கள் இயல்பு அன்றாம். அறிவும் பண்பும் சான்றவள் இத் தோழி! எனினும், அவனது போற்றா ஒழுக்கம் புரிந்த இழி தகவினைச் சுட்டி உணர்த்தலும் வேண்டும். அதனால் தன் கருத்தை உள்ளுறை பொருளால் தெரிவிக்கும் மாட்சியை உடையவளாகத் தோழியின் அருமையை உயர்த்துகிறார் ஓரம் போகியார் என்ற புலவர் பெருமான்.

"சியார்சு ஆர்ட்" என்பவர் "தமிழ்க் கவிதைகள்" எனும் தமது ஆய்வு நூலில்,

1. வடமொழியிலும் பிராகிருத இ யத்திலும் இடம் பெறுவதற்கும் பன்னூறாண்டுகட்கு மு இக் குறிப்பு பொருள் உத்தி தமிழ்ச் செய்யுள்களில் காணப் படுகின்றன; இத் தமிழ் உத்தியின் வலிந்த வழக்கினால் வடமொழியிலும் குறிப்புப் பொருள் கோட்பாடு உருவாகி இருக்கக்கூடும்.

2. வடமொழியின் தொல்லிலக்கியங்களில் பழந் தமிழ் இலக்கியத்தில் உள்ளது போல, நுட்பமும் திட்பமும் வகைமையும் சான்ற குறிப்புப் பொருள் உத்தி காண்டல் இயலாது.

3. பழந்தமிழ் இலக்கிய அரங்கில் புதிதாக நுழைவோரும் பாடல்களின் பெரும் பகுதியைத் தெரிந்து கொள்ள முடியுமாயினும், அவற்றை நெடிது பயின்று தோய்ந்த சிலர் மட்டுமே விளங்கிக் கொள்ளக் கூடிய குறிப்புப் பொருள் நுட்பம் ஒவ்வொரு பாடலிலும் இருக்கும்." என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.

அவர், பல பாடல்களை மொழி பெயர்த்துக் காட்டி, அவற்றின் படிமங்களும் சொற்களும் புலப்படுத்தும் குறிப்புப் பொருள் இவை என்றும் விரிவாக உணர்த்துகிறார்.

0

0: 1174: அன்பார்ந்த ஐயா, ...'புதிய கல்விக் கொள்கை' என்ற தலைப்பில் வந்த கட்டுரை கொற்கை முத்துகளின் குவியல் தான்!

புலவர் **தமிழ்மாறன்** -புதுப்பட்டி (நெல்லை)

0: 1175: அன்பு நிறை அய்யா, வணக்கம். 5-10-86 அன்று மணப்பாறை திருக்குறள் திருவிழாவில் தாங்கள் சொற்பொழிவாற்றிய போது, துணிவு மிக்க பெரியார் அவர்கள் பேசியது போலவே இருந்தது. மணப்பாறை நகரமே வியந்து பாராட்டுகிறது.

பெரியார் சிந்தனையாளர், **அ. இனியன்** (பத்மநாதன்)
மணப்பாறை, திருச்சி மா. வ.

0: 1176: பெரு மதிப்பிற்கும், போற்றுதலுக்குமுரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம்! ஐயா, சுவடி 22. ஓலை 10. தென்மொழி இதழில் தங்கள் ஆசிரியவுரை படித்தேன். அதன் வழி தங்களது உள்ளக் குமுறலை உணரமுடிந்தது; அவ்வெழுத்துகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நெருப்புத் துண்டாய் வெம்மையை வீசுவதை உணர்ந்தேன். ஆனால் இந்த வேக்காடு எட்ட வேண்டிய, சுட்டுப் பொசுக்க வேண்டிய, பதவிப் பித்தேறிய, சூடு, சொரணையற்ற, தம் வயிறு நிறைவதற்காக இனத்தையே அடகு வைக்கும் இனக் கேடர்களை எட்டுமா? தடித்துப் போன தோலை உடைய அப் பிறவிகள் இதையெல்லாம் பொருட்டாக மதிப்பார்களா? இன்று அனைத்து மானத்தையும் தூக்கியெறிந்தவர்கள்தாமே, ஆட்சியதிகாரத்தில் அமர முடிகிறது? அவர்களிடத்தில் மொழி, இன நலனுக்கான உழைப்பையோ, உணர்வையோ நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? தங்களைப் போன்றோர் கூற்றுகள் அவர்களின் கண்களில் தாம் படுமா? அல்லது காதுகள்தாம் கேட்குமா? நெஞ்சில்தான் நிலைக்குமா? இதைத்தான் நம் முன்னோர் கூறிப் போந்தாரே,

'நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்'—

—என்று. இன்று நமக்குப் பணவலிவு இல்லை. சீழ்க்கையடிக்கும் மந்தைக் கும்பலும் இல்லை. உண்மையான பொதுநலன் கருதி உழைப்போரோமிக மிகக் குறைவு. இந்த நிலையில் அமைதி வழியில் எவ்வளவு சொன்னாலும், எழுதினாலும் அத் தந்நலக் கும்பல் தனது நிலையை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. "மயிலே இறகு போடு" என்றால் இறகு போடுமா? நாம் புண்ணிற்கு மருந்து தடவ முடியுமா? இந்த மண்ணிலே, நெறிமுறை புதைக்கப்பட்டு, அறம் அழிக்கப்பட்டுப் பொதுநலம் சிதைக்கப்பட்டு உண்மை உயிரோடு கொளுத்தப்பட்டு, எவ்வளவே காலம் கடந்து விட்டது. புரையோடிப் புழுத்த புண்ணாய் விட்டது. மருந்துப் பூச்சால் எவ்வகைப் பயனும் ஏற்படப் போவதில்லை. அறுவை மருத்துவத்தால் தான் சரிப்படுத்த முடியும்!

புலவர் **அறிவுடைநம்பி**, மூலனூர்

0: 1177: அன்பு கனிந்த அய்யா! வணக்கம்! எங்களின் அன்பு அழைப்பினை ஏற்று வந்து, நம் திருக்குறள் திருவிழாவில் கலந்து கொண்டு திருக்குறள் பேருரை நிகழ்த்திச் சிறப்பித்த- எங்களுடனேயே இரண்டுநாள்கள் இருந்தும் அருள்மழை பொழிந்து, சிறப்பித்த- தங்களுக்கு எங்களின் நெஞ்சார்ந்த நல் நன்றியைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்த இரண்டு நாள்களில் உடனிருந்து தங்களின் சொல் நயத்தையும், கருத்துத் தெளிவையும், பண்பொழுக்கத்தையும், பழகும் பக்குவத்தையும் முறையாகக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு நல்கியதற்கு மேலும் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம் "தென்மொழி" தமிழ்ச்சிட்டு, "தமிழ்நிலம்" வழியாகப் பல்வேறு தெளிவு தரும் அறிவினைப் பெற்றாலும், தங்களுடன் என்றென்றும் இருந்து பெறும் அறிவு மிகவும் உயர்வு தருவதாகும். காலச் சூழலும், வாழ்வுச் சூழலும், தங்களுடனேயே நான் இருக்கத் தடை செய்கின்ற . ஆனால் என் மனத்தில் நீங்காத நல்லிடம் பெற்றுள்ளீர்கள் என்பது மட்டுமன்று, உண்மைத் தென்மொழித் தொண்டர்கள் உள்ளத்திலெல்லாம் நீங்கள் உணர்வூட்டிக் கொண்டு இருக்கின்றீர்கள் என்பதே உண்மை.

எத்தனை எட்டப்பர்கள் வசை பாடினும், சூதுசெய்யினும், வாய்மையே வெல்லும்; வெற்றி நம்முடையதாகவே இருக்கும். நரிமாவின் ஊளையிடுதலுக்கா அரிமா அஞ்சிடும்? அஞ்சாது!

பாசமிகு அய்யா! நீங்கள் மணவையில் நிகழ்த்திய பேருரையைக் கேட்ட மாந்தர்கள் விழிப்புணர்வு கொண்டனர். தங்களின் பேச்சுக்கு நல்லதொரு சிறந்த வரவேற்புக் கிடைத்தது. 'எம் வாழ்நாளில் கண்டிடாப் பேருரை' என்று அறிஞர் பலர் போற்றினர்.

பாவலர் **தாழை ந. இளவழகன்**, மணப்பாறை.

0: 1178. அன்பிற்கினிய அய்யா! வணக்கம். "**தென்மொழி**" யைத் தொடர்ந்து படித்துவரும் கூட்டத்தைச் சேர்ந்தவன் நான். சுவடி 22 ஓலை 7-8 இதழின் ஆசிரிய உரை -வேறு எவரும் சொல்லாத, எழுதாத புதிய செய்திகளைத் தாங்கி வந்தது மிகவும் அருமை. புதிய கல்விக் கொள்கை- எதற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்பதைத் தென்மொழி தெளிவாக அந்த உரையில் கூறுகிறது. பொதுவாகவே, வடக்கத்தி ஆட்சியாளர்கள் தமிழ்நிலத்தைத் தமது அடிமை நாடாக வைத்துக் கொள்ளவே எல்லா நிலையிலும் செயலாற்றுகிறார்கள். எனவே இந்த ஆட்சியில்- மீள, **சுவடி 21, ஓலை 11**, நமது **'தென்மொழி'** யில் அட்டையில் வந்த பாட்டின் வழி 'முனித்த குரலோடு முழங்கலே முறையாம்'. இதற்கான சூழலைத் தாங்கள் தோற்றுவிக்கக் கூடாதா?

ந. தருமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
முத்துப்பேட்டை.

0: 1179: அன்பு கெழுமிய ஐயா. வணக்கம். நலமே விளைக! நாம் துணிந்து விடுதலைக் குரலை ஓங்கி முழக்கவில்லையெனில் நம்மினம் தமிழினமாக இத் துணைக் கண்டத்தில் இருக்கப் போவதில்லை. இந்திய இனமாகத்தான் இருக்கும்.

அந்த இன அழிப்பு வேலையை இராசீவ் காந்தி முனைந்து செய்து வருகிறார். இந்தியா, இந்துக்கள், இந்துமதம், இந்தி மொழி, இந்தியப்பண்பாடு, இந்தியக்கலை என்னும் வெறி

(தொடர்ச்சி உள்ளே 5 ஆம் பக்கம் பார்க்க)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)

நமக்கு வந்த மடல்கள்.

0: 1180: பேரன்பின் ஐயா அவர்களுக்கு வணக்கம்.

'புலி'கள் இருப்பை அரசு வளைத்தது;
கருவிகள் பறித்தது; காவலில் வைத்தது;
திரைப்படக் காட்சியாய் உரைத்திட நடந்தது;
நெஞ்சங் கிடந்து நெடிது துடித்தது;
துடித்ததை எவர்பால் எடுத்து ரைப்பேன்?
வருவார் போவார் மறித்துப் பிதற்றினேன்!
ஒருவரும் உண்மையாய் உணர்ந்தா ரில்லர்.
அரசியற் காரர் அஞ்சி னார்களோ?
புலிகளுக் காகப் போராட வில்லை.
துடித்ததைப் பாட்டில் வடித்திட நினைத்தேன்.
ஐயா, ஐயா, எப்படிச் சொல்வேன்?
முதல்வரைப் பற்றிக் கடையராய்ப் பாடும்
கொச்சைப் பாட்டே நச்சி எழுந்தது!
'தென்மொழி'க் கொவ்வாது; 'தமிழ்நிலம்' தாங்காது
எனவெழு தாமல் இருந்துவிட் டேனே!

தங்களன்புள்ள,
பாவலர் த. அன்பழகன், மஞ்சள்நீர்க் காயல்.

0: 1181: அன்பின் பெருந்தகை நண்பர்! என் பற்றுமை சால் வணக்கம். தென்மொழி சுவடி 22-11-ஓலையில் கேள்வி 19-க்கு உரிய விடை கண்டு சற்று கவன்றேன். இவற்றைத் தென் மொழியில் வெளியிட வேண்டுகிறேன்:-

ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ என்னும் ஐந்து எழுத்தும் இவற்றின் வழிப் பிறக்கும் உயிரோடு கலந்த எழுத்துகளும் தமிழ் மொழிக்குரிய எழுத்துகள் அல்ல. **இவை எக்காலத்தில் தோன்றினும் எவர் தோற்றுவித்தாலும்** தமிழ் மொழி எழுத்து ஒலி நெறிகட்கும் முறைகட்கும் முரண்பட்டவை; தமிழ் மொழியின் தனிப்பெரும் ஒலிச் சிறப்பு அமைப்புகளைப் பாழ்படுத்துவன; எனவே இவை நீக்கற் குரியன என்ற தெளிவும் திட்டமும் தமிழர்கள் உள்ளங்களில் மலரல் வேண்டும். தமிழ் மொழி வேறு எந்த மொழி எழுத்துகளையும் கடன் பெறுதல் கூடாது; கடன் பெறத் தேவையில்லை. பிறமொழி ஒலிகளைத் தமிழ் மொழி ஒலிகளின் வழியாகவே பலுக்குதல் வேண்டும். எ-டு:- "சப்பான்"- என்க. "சூன்" என்க. "சூலை" என்க. "இராசா" என்க.

ஆங்கில மொழியில் எத்தனை எழுத்துகள்? அது பிற மொழி எழுத்துகளைக் கடன் பெறுகிறதா? எனவே என்றும் பிற மொழி எழுத்துகளைத் தமிழ் கடன் பெறுதல் கூடாது என்பதே முந்தையோர் கொண்ட முறை. (தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)